## வர்த்தக நிதிப் பரிவர்த்தனைகள் அடங்கலாக வர்த்தக இணைய வங்கிச்சேவையை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

வர்த்தக இணைய வங்கிச்சேவை வடிவில் இணைய வங்கிச் சேவை மற்றும் கொடுக்கல்வாங்கல் சேவைகளை வழங்கும் இணையத்தளமொன்றை கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட் உரிமை கொண்டு, தொழிற்படுத்தி மற்றும் பேணி வருகின்றது. கார்கில்ஸ் வங்கி மற்றும் அதன் இணை நிறுவனங்கள் (கூட்டாக "கார்கில்ஸ் வங்கி" என்று விழிக்கப்படுகின்றது) மற்றும் வாடிக்கையாளர் இடையில் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கான அனுசரணையாளராக இந்த வலைத்தளம் செயற்படுகின்றது. வலைத்தளத்தினூடாக வழங்கப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகள் இணைய கொடுக்கல்வாங்கல் செயலாக்கம், தகவல், செய்திகள், கண்காணிப்பான்கள், கணிப்பான்கள் மற்றும் ஆபத்தைக் குறைத்தல் போன்ற பகுப்பாய்வுக் கருவிகள் மட்டுமன்றி, ஏனையவற்றையும் உள்ளடக்கலாம்.

### 1. வரையறை விளக்கங்கள்

இந்த ஆவணத்திலுள்ள பின்வரும் வார்த்தைகளும், சொற்தொடர்களும் வேறு விதமாக குறிப்பிட்டாலன்றி, அவற்றுக்கு எதிராக தரப்பட்டுள்ள அர்த்தத்தை கொண்டுள்ளன:

1. **"கார்கில்ஸ் வங்கி"** என்பது இலங்கை சோசலிச சனநாயக குடியரசின் சட்டங்களுக்கு அமைவாக கூட்டிணைப்புச் செய்யப்பட்டு (பதிவு இலக்கம் PB 4847) இல.696, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகத்தைக் கொண்டுள்ள கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட்டைக் குறிப்பதுடன், அதன் உரித்தாளர்கள் மற்றும் உரிமை ஒப்படைக்கப்பட்டவர்களையும் உள்ளடக்கும்.

2. கார்கில்ஸ் வங்கியின் **"இணை நிறுவனம்"** என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது: (அ) கார்கில்ஸ் வங்கியின் எந்தவொரு தாய் நிறுவனம் அல்லது துணை நிறுவனம்; அல்லது (ஆ) கார்கில்ஸ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு நபர்; அல்லது (இ) கார்கில்ஸ் வங்கி நேரடி அல்லது ஆதாய நலன் அல்லது கட்டுப்பாட்டுடன் 26% அல்லது அதற்கு மேலான வாக்குப் பத்திரங்களைக் கொண்டுள்ள எந்தவொரு நபர். இணை என்பதற்கு வரையறை விளக்கம் அளிக்கும் நோக்கத்திற்கு எந்தவொரு நபர் தொடர்பிலும் இலக்கண மாறுபாடுகளுடன் "கட்டுப்பாடு" என்பது வாக்குப் பத்திரங்களின் உரிமையாண்மை, ஒப்பந்தத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு

அங்கத்தவரை(அங்கத்தவர்களை) நியமிக்கும் உரிமை அல்லது வேறு எந்த வகையிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அத்தகைய நபருக்கு முகாமைத்துவம் மற்றும் கொள்கைகளை வழிநடாத்தும் அதிகாரம் மற்றும் “நபர்” என்பது ஒரு நிறுவனத்தை, கூட்டுத்தாபனத்தை, பங்குடமையை, அறநிதியத்தை அலது வேறு எந்தவொரு ஸ்தாபனம் அல்லது நிறுவனத்தை அல்லது வேறு எந்தவொரு சபையையும் குறிக்கின்றது.

3. **“கணக்கு”** என்பது இணைய சேவைகளுக்கு தொழிற்படுத்தக்கூடிய வகையில் வாடிக்கையாளரின் நடைமுறைக் கணக்கினை மற்றும்/அல்லது கார்கில்ஸ் வங்கியால் குறிப்பிடப்பட்ட வேறு எந்த வகையான தகைமை கொண்ட கணக்கை(கணக்குகளை) குறிக்கின்றது. இணைய சேவைகள் கிடைக்கப்பெறுவதற்கு வழிசெய்யப்பட்டுள்ள கணக்கு(கணக்குகள்) வாடிக்கையாளரின் பெயரில் இருத்தல் வேண்டும்.

**4.** **“வாடிக்கையாளர்”** என்பது தனி/பன்முக நிதிப் பரிவர்த்தனைகள் (SLIPS/CEFT) அடங்கலாக வர்த்தக இணைய வங்கிச்சேவை வடிவில் மற்றும் எதிர்காலத்தில் வழங்கப்படக்கூடிய அதனையொத்த சேவைகள் (இதன் பின்னர் இணைய சேவைகள் என விழிக்கப்படுகின்றது) வடிவில் கார்கில்ஸ் வங்கியின் இணைய வங்கிச்சேவை மற்றும் பரிவர்த்தனை சேவைகளைப் பெற்றுக்கொள்கின்ற வரையறுக்கப்பட்ட பொறுப்புடமை நிறுவனம் (தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் அடங்கலாக), பங்குடமை, கழகம்/சங்கம்/சபை, அரச சார்பற்ற நிறுவனம், ஏகபோக உரிமையாண்மை ஆகியவற்றை உள்ளடக்கிய வர்த்தக வாடிக்கையாளரைக் குறிக்கின்றது.

**“CEFT”** என்பது இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் மற்றும் வழிகாட்டலின் கீழ் Lanka Clear (Pvt) Ltd நிறுவனத்தால் தொழிற்படுத்தப்படுகின்ற இலங்கையின் நம்பிக்கைமிக்க தேசிய கொடுப்பனவு வலையமைப்பின் ஒருங்கிணைந்த அங்கமான பொது இலத்திரனியல் நிதிப் பரிவர்த்தனை முறைமையாகும். தினமொன்றில் எவ்வேளையிலும் ரூபாவிலிருந்து ரூபாவிற்கான கொடுக்கல்வாங்கல்களை (அதிகபட்சமாக ரூபா 5 மில்லியன் மட்டுமே) முன்னெடுப்பதற்கு வங்கி வாடிக்கையாளர்களுக்கு இடமளிப்பதில் Lanka Pay-CEFT அங்கத்தவர்களுக்கிடையில் வலைத்தளத்தின் ஊடாக உடனடி நிதிப் பரிவர்த்தனைகள்/கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும், வருடத்தில் 365 தினங்களும் 24 மணி நேரமும் வாடிக்கையாளர்களால் வங்கிச்சேவை நேரங்கள் அல்லாத நேரங்களிலும் ஒரு சில செக்கன் நேரத்தினுள் இலத்திரனியல் கொடுப்பனவு முறையில் இடம்பெறும் கொடுப்பனவுகளுக்கான வங்கிப் பரிவர்த்தனைகளை

தன்னியக்க டெலர் இயந்திரம், மொபைல் தொலைபேசி, இணையம் ஆகியவற்றினூடாக மேற்கொள்ள இடமளிக்கின்றது.

**"SLIPS"** - Lanka Clear (Pvt) Ltd இனால் பேணப்பட்டு வருகின்ற இலத்திரனியல் பரிவர்த்தனை பொறிமுறையான இலங்கை வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு முறைமை. கொடுக்கல்வாங்கல் ஒன்றின் போது ரூபா 5 மில்லியன் வரையான தொகையுடன், குறைந்த பெறுமானம் கொண்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு SLIPS பரிவர்த்தனைகள் பிரதானமாக வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

**5.** "**வாடிக்கையாளர் தகவல் விபரம்**" என்பது கிடைக்கப்பெறுகின்ற/வாடிக்கையாளருக்கு வழங்குவதற்கு முன்வைக்கப்பட்டுள்ள எந்தவொரு இணைய சேவைகள் தொடர்பிலும் கார்கில்ஸ் வங்கியால் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்டுள்ள அவரது தகவல் விபரங்களை குறிக்கின்றது.

6. "**வாடிக்கையாளர் அடையாளம்**" **அல்லது** "**பாவனையாளர் அடையாளம்**" என்பது வர்த்தக இணைய வங்கிச்சேவையைப் பயன்படுத்தி கார்கில்ஸ் வங்கியுடனான தனது கணக்குகளை அடையப்பெறுவதற்கு இடமளிக்கும் வகையில் கார்கில்ஸ் வங்கியால் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ள பாவனையாளர் அடையாளமாகும்.

7. "**வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்**" என்பது கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை வாடிக்கையாளர்/பாவனையாளர் மேற்கொள்வதற்கு, முன்னெடுப்பதற்கு, அதிகாரமளிக்க அல்லது அங்கீகரிப்பதற்கு கார்கில்ஸ் வங்கி இணைய சேவைகளை அடையப்பெறுவதற்கு வாடிக்கையாளர் வழங்க வேண்டிய/வழங்குமாறு கோரப்படுகின்றவாறு, காலத்திற்கு காலம் கார்கில்ஸ் வங்கியால் குறிப்பிடப்படுகின்ற கடவுச்சொல் அல்லது வேறு எந்த வகையான அங்கீகரிப்புக்களாகும். கடவுச்சொல்லை மீளமைத்துக் கொள்ளும் செய்தி பதிவு செய்யப்பட்ட மொபைல் தொலைபேசி இலக்கத்திற்கு ஒரு தடவை உபயோகிக்கும் கடவுச் சொல்லொன்று எஸ்எம்எஸ் மூலமாக வாடிக்கையாளருக்கு/பாவனையாளருக்கு தெரியப்படுத்தப்படுவதுடன், ஒரு தடவை உபயோகிக்கின்ற அத்தகைய கடவுச்சொல்லின் ஆயுட்காலம் 48 மணி வரை மட்டுப்படுத்தப்படும்.

8. "**தனிப்பட்ட தகவல் விபரம்**" என்பது எந்தவொரு இணைய சேவையையும் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்ப படிவத்தில் அல்லது காலத்திற்கு காலம் கார்கில்ஸ் வங்கியால் வழங்கப்படுகின்ற படிவங்களில் வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கிக்கு வழங்குகின்ற தகவல் விபரங்களாகும்.

9. “**கொடுக்கல்வாங்கல்**” என்பது பங்குகள், கையிருப்புக்கள், பிணையங்கள், நாணயம் அல்லது வேறு எந்த நிதியியல், அரச வருமான மற்றும் நாணய கருவிகள் தொடர்பான கொள்வனவு அல்லது விற்பனை அல்லது வங்கிச்சேவை அல்லது கார்கில்ஸ் வங்கியால் வாடிக்கையாளருக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற அல்லது பெற்றுக்கொள்கின்ற அல்லது இதன் பின்னர் ஏற்படுத்திக் கொள்ளவுள்ள அல்லது வழங்கப்படவுள்ள வேறு சேவைகள் தொடர்பான எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையையும் குறிக்கும். ஏனைய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை அனுமதிக்க அல்லது தற்போது கிடைக்கப்பெறுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு கார்கில்ஸ் வங்கி தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளதுடன், அது தொடர்பில் இந்த வடிவத்தில் அல்லது கார்கில்ஸ் வங்கி தீர்மானிக்கின்ற வேறு வடிவத்தில் அறியத்தரப்படும்.

**10.** “**பாவனையாளர்**” என்பது வாடிக்கையாளரின் முகவராக இணைய சேவைகளை உண்மையில் தொழிற்படுத்துவதற்கு வாடிக்கையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நபரைக் குறிக்கின்றது. வாடிக்கையாளர் ஒரு நிறுவனமாக அமையும் பட்சத்தில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களும், வாடிக்கையாளர் நிறுவனம் தவிர்ந்த வேறு வர்த்தக அமைப்பாக இருப்பின் கணிசமான முகாமைத்துவ அதிகாரத்தைக் கொண்டுள்ள நிர்வாக அமைப்பும், அல்லது அத்தகைய வர்த்தக அமைப்பின் கட்டுப்பாட்டு நிர்வாகமும் குறிப்பிட்ட நபருக்கு (நபர்களுக்கு) (இதன் பின்னர் பாவனையாளர் என விழிக்கப்படுவர்) அனுமதி அங்கீகாரம் அளிப்பதுடன், வாடிக்கையாளரின் சார்பில் இணைய சேவைகளை அடையப் பெறுவதற்கு அனுமதிக்கப்படும் நபர் ஆவார். குறிப்பிட்ட அனுமதி அங்கீகாரம் என்பது பணிப்பாளர் சபைத் தீர்மானம், அட்டோர்ணி தத்துவம் அல்லது ஆணை என்பதுடன், அவ்வாறான ஆவணம் கார்கில்ஸ் வங்கியில் பதிவு செய்யப்படல் வேண்டும். கார்கில்ஸ் வங்கியால் பாவனையாளருக்கு விடுக்கப்படுகின்ற எந்தவொரு தொடர்பாடலும், வாடிக்கையாளருக்கும் விடுக்கப்பட்டதாகவே கருதப்படும். அவ்வாறே, கார்கில்ஸ் வங்கியால் வழங்கப்படுகின்ற இணைய சேவைகளினூடாக பாவனையாளர் மேற்கொள்ளும் எந்தவொரு தொடர்பாடல் மற்றும்/அல்லது நடவடிக்கை வாடிக்கையாளர் சட்டபூர்வமாக கட்டுப்படுத்துவதாக அமையும்.

11. “**வலைத்தளம்**” **என்பது** **www.cargillsbank.com** இனைக் குறிப்பதுடன் தனது வாடிக்கையாளர்களுக்கு இணைய சேவைகளை வழங்குவதற்காக ஏனைய சேவைகளுக்கு இடையில் கார்கில்ஸ் வங்கிக்கு சொந்தமான, அதனால் இயக்கப்பட்டு, பேணப்படுகின்றதாகும். கார்கில்ஸ் வங்கி மற்றும் அதன் இணை நிறுவனங்கள் (கூட்டாக “கார்கில்ஸ் வங்கி” என்று விழிக்கப்படுகின்றது) மற்றும் வாடிக்கையாளர் இடையில் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கான அனுசரனையாளராக இந்த வலைத்தளம் செயற்படுகின்றது. வலைத்தளத்தினூடாக

வழங்கப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகள் இணைய கொடுக்கல்வாங்கல் செயலாக்கம், தகவல், செய்திகள், கண்காணிப்பான்கள், கணிப்பான்கள் மற்றும் ஆபத்தைக் குறைத்தல் போன்ற பகுப்பாய்வுக் கருவிகள் மட்டுமன்றி, ஏனையவற்றையும் உள்ளடக்கலாம்.

12. “**வர்த்தக இணைய வங்கிச் சேவை**” என்பது கார்கில்ஸ் வங்கியின் இணைய வங்கிச் சேவையின் வர்த்தகப் பெயராகும். வர்த்தக இணைய வங்கிச் சேவை, இணைய வங்கிச் சேவை அல்லது ஒன்லைன் வங்கிச் சேவை ஆகிய சொற்பதங்களும் ஆவணத்தில் மாறி மாறி பயன்படுத்தப்பட்டுள்ளன.

13. “**வர்த்தக இணைய வங்கிச் சேவை**” அல்லது “**ஒன்லைன் வங்கிச் சேவைகள்**” அல்லது “**இணைய வங்கிச்சேவை**” என்பது இணையத்தினூடாக கார்கில்ஸ் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அவ்வப்போது கார்கில்ஸ் வங்கியின் ஆலோசனையின் பிரகாரம் கணக்கு தொடர்பான விபரங்களை அடையப் பெற, உற்பத்திகள் மற்றும் ஏனைய சேவைகளுடன் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கார்கில்ஸ் வங்கியால் வழங்கப்படுகின்ற இணைய சேவைகளைக் குறிக்கின்றது.

14. “**ஒரு தடவை உபயோகிக்கின்ற கடவுச் சொல்**” என்பது பாவனையாளர் தனியொரு கொடுக்கல்வாங்கலை அல்லது நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு அவருக்கு அங்கீகாரமளிக்கின்ற வகையில் தன்னியக்க முறையில் தோற்றுவிக்கப்படுகின்ற எழுத்துக்கள் அல்லது எண்ணெழுத்துக்களின் கோவையாகும். ஒரு தடவை உபயோகிக்கின்ற கடவுச்சொல்லானது கார்கில்ஸ் வங்கியின் இணைய வங்கிச்சேவையால் தோற்றுவிக்கப்படுவதுடன், அதனை அங்கீகரிப்பதற்காக முற்கூட்டியே பதிவு செய்யப்பட்ட சாதனத்திற்கு/சாதனங்களுக்கு செய்தி ஒன்று விநியோகிக்கப்படும். வழக்கமாக ஒரு தடவை உபயோகிக்கும் கடவுச்சொல் 48 மணித்தியாலங்களில் காலாவதியாகுவதுடன், கார்கில்ஸ் வங்கியின் தீர்மானத்திற்கு அமைவாக அவ்வப்போது அது மாறுபடலாம்.

1. **விளக்கம்**

தன்மை சொற்களால் விழிக்கப்படும் அனைத்தும் பன்மையையும் குறிப்பதுடன், அவ்வாறே பன்மைகள் அனைத்தும் தன்மையையும் குறிக்கும். “அடங்கலாக” என்ற சொற்பதமானது “வரையறை இல்லாது” என விளங்கிக் கொள்ள வேண்டும். இணைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் குறிப்பிடப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் ஒருங்கே வாசித்து விளங்கியுள்ளோம் நம்பிக்கையுடனேயே அனைத்து கொடுக்கல்வாங்கல்

நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த ஆவணத்தில் வாடிக்கையாளர் மற்றும்/அல்லது பாவனையாளரை விழிப்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள ஆண்பால் பதங்கள் பெண்பாலையும் உள்ளடக்கியுள்ளன.

## 2. வர்த்தக இணைய வங்கிச் சேவைகள்

வாடிக்கையாளர் கணக்கு மீதி தொடர்பான தகவலைப் பெற்றுக்கொள்ளல், கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள், கணக்கு கூற்று, நிதிப் பரிமாற்ற விண்ணப்பம், வாணிப நிதிக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் மற்றும் அவ்வப்போது கார்கில்ஸ் வங்கி தனது தீர்மானத்திற்கு அமைய வழங்கும் அத்தகைய ஏனைய வசதிகளுக்கு இடமளிக்கின்ற வர்த்தக இணைய வங்கிச்சேவை வடிவில் ஒன்லைன் வங்கிச்சேவை மற்றும் கொடுக்கல்வாங்கல் சேவைகள் போன்ற வர்த்தக இணைய வங்கிச் சேவைகளை வாடிக்கையாளருக்கு வழங்கும் முயற்சிகளை கார்கில்ஸ் வங்கி முன்னெடுக்கும். கார்கில்ஸ் தனது தற்துணிபின் பிரகாரம் வர்த்தக இணைய வங்கிச்சேவையினூடாக வழங்குகின்ற சேவைகளில் மேலும் பலவற்றை சேர்க்கவோ அல்லது நீக்கவோ கூடும். குறிப்பிட்ட சேவை ஒன்று கிடைக்கப்பெறுகின்றமை/கிடைக்கப்பெறாமை தொடர்பில் மின்னஞ்சல், கார்கில்ஸ் வங்கியின் இணையப் பக்கம் அல்லது எழுத்து மூலமான அறிவித்தல் ஊடாக அறியத் தரப்படும். இணைய வங்கிச் சேவை ஊடாக வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்ற தகவல் விபரங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் புதுப்பிக்கப்படாது, ஆனால் ஒழுங்கான கால இடைவெளிகளில் புதுப்பிக்கப்படும்.

ஆகையால், இணைய வங்கிச் சேவைகளின் ஊடாக வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்ற எந்தவொரு தகவல் விபரமும், அது கடைசியாக புதுப்பிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் உள்ளவாறு காணப்படுவதுடன், வாடிக்கையாளருக்கு கிடைக்கப்பெற்ற திகதி மற்றும் நேரத்தில் உள்ளவாறு அல்ல. அத்தகைய தகவல் விபரங்களை நம்பி அல்லது அவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வாடிக்கையாளருக்கு ஏற்படும் எவ்விதமான இழப்புகளுக்கும் கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக் கொள்ள மாட்டாது.

இணைய வங்கிச்சேவைகளின் ஒரு பகுதியாக, தரவு/தகவல்/தொகுக்கப்பட்ட அறிக்கைகள்/மூன்றாம் தரப்பினால் வழங்கப்படுகின்றவற்றை அடையப்பெறுவதை கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளருக்கு வழங்கக்கூடும். அத்தகைய தரவு/தகவல்/அறிக்கைகள் தொடர்பான துல்லியம்/உண்மைத்தன்மைக்கு கார்கில்ஸ் வங்கி எவ்விதமான பிரதிநிதித்துவம் அல்லது உத்தரவாதத்தை வழங்குவதில்லை. மேலும், கார்கில்ஸ் வங்கி (இருக்கும் பட்சத்தில்) மற்றும் மூன்றாம் தரப்பின்

முற்கூட்டிய ஒப்புதல் இன்றி அத்தகைய தரவு/தகவல்/அறிக்கையை வாடிக்கையாளர் பரப்புதல், வெளியிடுதல் அல்லது சுற்றுநிருபம் செய்தல் ஆகாது.

கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் ஆவணப் பதிவுகளை கார்கில்ஸ் வங்கி தனக்கு விருப்பமான எந்த வடிவத்திலும் வைத்துப் பேண முடியும். பிணக்குகள் ஏதேனும் எழுகின்ற பட்சத்தில், கார்கில்ஸ் வங்கியின் வசமுள்ள ஆவணங்கள் உறுதியானதும், கடப்பாடு கொண்டதுமாக கருதப்படுவதுடன், கார்கில்ஸ் வங்கியின் ஆவணப் பதிவுகள் தவறானவை அல்லது முழுமையற்றவை என தெளிவான ஆதாரம் இல்லாத சமயங்களில் வர்த்தக இணைய வங்கிச்சேவையினூடாக முன்னெடுக்கப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் மிகச் சிறந்த சான்றாகவும் கருதப்படும்.

வர்த்தக இணைய வங்கிச்சேவை மற்றும் அது தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் ஆகியவற்றின் பகுதியாக வழங்கப்படுகின்ற எந்தவொரு இணைய சேவைக்குமான எந்தவொரு கோரிக்கையும் அத்தகைய கோரிக்கையை கார்கில்ஸ் வங்கி பெற்றுக்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் கடப்பாடு கொண்டதாகவே கருதப்படும்.

வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல் தொடர்பான இணைய சேவைக்கான எந்தவொரு கோரிக்கையின் போதும், கார்கில்ஸ் வங்கியால் குறிப்பிடப்படுகின்ற நாணய மாற்று வீதங்கள் தற்காலிகமானவையாக கருதப்படுவதுடன், நாணய மாற்று வீதம் தொடர்பில் எதிர்காலத்தில் நிகழக்கூடிய மாறுபாடுகளுக்கு உட்பட்டவை. கொடுக்கல்வாங்கல் இடம்பெறும் சமயத்தில் வழங்கப்படுகின்ற வீதமானது அதற்குரிய நோக்கம் மற்றும் தேவைக்காக மட்டுமே அமைந்திருக்கும்.

வர்த்தக இணைய வங்கிச் சேவை தொடர்பான பாதுகாப்பினை உறுதி செய்தல் மற்றும் அனுமதியற்றோர் அடைவதைத் தடுத்தல் தொடர்பில் கார்கில்ஸ் வங்கி தன்னிடமுள்ள நியாயமான தொழில்நுட்பத்தை உபயோகித்து, உறுதி செய்வதற்கு தன்னாலான நியாயபூர்வமான முயற்சிகள் அனைத்தையும் கார்கில்ஸ் வங்கி முன்னெடுக்கும்.

வர்த்தக இணைய வங்கிச்சேவையை அல்லது தொடர்புபட்ட வேறு எந்தவொரு சேவையையும் சட்டவிரோதமான எந்தவொரு நோக்கத்திற்கும் உபயோகிக்காமல் இருப்பதை அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் அங்கீகரிக்கப்படாதவற்றை மேற்கொள்ளாமல் இருப்பதை அல்லது

முறையற்றவற்றை முன்னெடுக்காமல் இருப்பதை வாடிக்கையாளர் உறுதி செய்தல் வேண்டும்.

3. **இணைய சேவைகளை அடையப்பெறல்**

கார்கில்ஸ் வங்கி தனது தற்துணிபின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இணைய சேவைகளை வழங்கக்கூடும். வாடிக்கையாளர் இணைய பாவனையாளராக இருத்தல் வேண்டும் அல்லது இணையத்தை சட்டரீதியாக அடையப் பெறும் மற்றும் இணையம் எவ்வாறு தொழிற்படுகின்றது என்ற அறிவு கொண்டவராக இருத்தல் வேண்டும். இணைய சேவைகளை அடையப்பெறுவதற்கு தேவைப்படுகின்ற பிரவுசர்கள் போன்ற இணைய மென்பொருள் தொடர்பில் கார்கில்ஸ் வங்கி அவ்வப்போது அறிவிக்கும். இணைய மென்பொருள் அனைத்து பதிப்பு வடிவங்களுக்கும் கார்கில்ஸ் வங்கி இசைவாக்கம் வழங்கும் என்று கடப்பாடு எதுவும் கிடையாது.

4. **அறிவிப்புக்கள்**

பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக கார்கில்ஸ் வங்கி மற்றும் வாடிக்கையாளர் அறிவிப்புக்களை வழங்க முடியும்: வாடிக்கையாளரால் கடைசியாக வழங்கப்பட்டுள்ள முகவரி/தொலைநகல் இலக்கத்திற்கு எழுத்து வடிவில் கையில் ஒப்படைக்கப்படும் அல்லது அனுப்பி வைக்கப்படும். கார்கில்ஸ் வங்கி எனில் கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட், இல. 696, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும், கார்கில்ஸ் வங்கி தனது இணையத்தளத்தில் பொதுவான அறிவிப்புக்களை வெளியிடுவதுடன், இது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பொருந்தும். அத்தகைய அறிவிப்புக்கள், ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் தனிப்பட்டரீதியில் விடுக்கப்பட்ட அறிவிப்பின் அதே விளைவைக் கொண்டிருக்கும்.

5. **அங்கீகார நடைமுறை**

5.1 வழங்கப்பட்ட வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் வாடிக்கையாளரின் கணக்கினை அடைந்துகொள்வதற்கு இடமளிப்பதுடன், வாடிக்கையாளரே அதன் ஒரே மற்றும் பிரத்தியேக உரிமையாளர் என்பதையும், வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லை உபயோகிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு பாவனையாளர் என்பதையும், வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லின் உபயோகம், இரகசியம் மற்றும் பாதுகாப்பு மற்றும் அத்தகைய வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லை உபயோகித்து வாடிக்கையாளரின் கணக்கு தொடர்பான அனைத்து கட்டளைகள்

மற்றும் தகவல் விபர மாற்றங்கள் ஆகியவற்றிற்கான முழுப்பொறுப்பினை ஏற்றுக்கொள்வதையும், வாடிக்கையாளர் ஒப்புக்கொள்வதுடன், பிரதிநிதித்துவம் அளிப்பதுடன், உத்தரவாதத்தையும் வழங்குகின்றார். வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லை உபயோகித்து அங்கீகரிக்கப்படுகின்ற அறிவுறுத்தல்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கிக்கு அனுமதி அங்கீகாரத்தை வழங்குவதுடன்இ அத்தகைய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு வாடிக்கையாளர்கள் கடப்பாடு கொண்டவர்கள்.

வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் தொடர்பில் அவ்வப்போது கார்கில்ஸ் வங்கியால் விடுக்கப்படுகின்ற அத்தகைய வழிகாட்டுதல்கள், அறிவுறுத்தல்கள் அல்லது விதிமுறைகளுக்கு வாடிக்கையாளர் கட்டுப்படுதல் வேண்டும்.

5.2 முறையான அங்கீகார நோக்கங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு வாடிக்கையாளர் கட்டுப்பட்டு நடப்பதுடன், அதனை உறுதி செய்தல் வேண்டும்: கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்குத் தேவையான பரிந்துரைக்கப்பட்ட அங்கீகார தொழில்நுட்பங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டு, உறுதி செய்வதுடன், வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் வெளிப்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான அனைத்து நியாயபூர்வமான நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல் வேண்டும்.

I. முதலில் பாவனையாளர்-அடையாளச் சொல் மற்றும் இரகசிய வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் ஆகியன கார்கில்ஸ் வங்கியால் பாவனையாளருக்கு ஒதுக்கப்படும். கார்கில்ஸ் வங்கியால் வழங்கப்படுகின்ற வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் வாடிக்கையாளர்/பாவனையாளர் முதலில் கணக்கினை அடையப்பெறுவதற்கு இடமளிக்கும் இயல்புநிலை கடவுச்சொல்லாக அமைவதுடன், முதன்முறையாக இணைய சேவைகளை அடையப்பெற்ற பின்னர் கார்கில்ஸ் வங்கியால் வழங்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லை வாடிக்கையாளர்/பாவனையாளர் மாற்றிக் கொள்ள வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடாக அதன் பின்னர் வாடிக்கையாளர்/பாவனையாளர் தனது வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லை அடிக்கடி மாற்றிக்

கொள்ளுதல் வேண்டும். கார்கில்ஸ் வங்கியின் இணைய சேவைகளை உபயோகித்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையொன்றை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு வாடிக்கையாளரின் பாவனையாளர்கள் விபரங்களை வழங்கி அவற்றை அங்கீகரிக்கும் தேவை உள்ளதுடன் (வாடிக்கையாளரின் தேவையைப் பொறுத்து அங்கீகரிக்கும் நபர்களின் எண்ணிக்கை மாறுபடலாம்) வாடிக்கையாளரின் பாவனையாளர் அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை சரியாக பதிவு செய்த பின்னரே கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படும். தவறான கடவுச்சொல் மற்றும் வாடிக்கையாளர்/பாவனையாளர் அடையாளச் சொல்லை தொடர்ச்சியாக 3 தடவைகள் முயற்சி செய்யும் பட்சத்தில் அது முடக்கப்படுவதுடன், அதனை மீளமைத்துக் கொள்வதற்கு/புதிய கடவுச்சொல்லை பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர்/பாவனையாளர் கோரிக்கையை முன்வைத்தல் வேண்டும்.

II. வாடிக்கையாளர்/பாவனையாளர் அடையாளச் சொல் மற்றும் வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் ஆகியவற்றைப் பாதுகாப்பாக பேணுதல் மற்றும் உபயோகித்தல் ஆகியவற்றிற்கு வாடிக்கையாளரே முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியதுடன், அவற்றின் முறையற்ற பாவனையால் ஏற்படுகின்ற எவ்விதமான இழப்புக்கள் மற்றும் ஏனைய விளைவுகளுக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். முன்னெச்சரிக்கை ஏற்பாடாக வாடிக்கையாளர்/பாவனையாளர் அடையாளச்சொல் மற்றும்/அல்லது வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் ஆகியவற்றை மூன்று (3) தடவைகள் தவறாக பதிவு செய்தால் இணைய வங்கிச் சேவையுடனான இணைப்பானது தடைப்படும்.

III. வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் மற்றும் வாடிக்கையாளர்/பாவனையாளர் அடையாளச் சொல் ஆகியவற்றின் அந்தரங்கத்தைப் பேணுவதற்கு வாடிக்கையாளர் உரிய அக்கறையுடன் செயற்படல் வேண்டும். வாடிக்கையாளரின் கணக்குகள் அடங்கலாக மூன்றாம் தரப்பினர் இச்சேவைகளை அடையப்பெறும் பட்சத்தில், வாடிக்கையாளரே அதற்கான பொறுப்பினை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளவோ அல்லது அத்தகைய வழியில் அடையப்பெறுதல் அல்லது உபயோகித்தல் தொடர்பில் மூன்றாம் தரப்பு மட்டுமன்றி எவர் மூலமாகவும் கார்கில்ஸ் வங்கிக்கு ஏற்படுகின்ற இழப்பீட்டு கோரல்கள் அல்லது வழக்குகள் காரணமாக ஏற்படுகின்ற இழப்புக்கள் அல்லது பாதிப்புக்களிலிருந்து கார்கில்ஸ் வங்கிக்கு எதிரான நட்டஈடுகளுக்கும் மற்றும் ஏனைய எந்தவொரு விளைவுகளுக்கும் வாடிக்கையாளரே முற்றுமுழுதாக பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

IV. வாடிக்கையாளர் கடவுச்சொல்லை சரிபார்த்தல் தொடர்பானவற்றைத் தவிர, இணையத்தளத்தின் மூலமாக அல்லது வேறு எந்த வழியிலும் வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது வாடிக்கையாளரிடமிருந்து வந்துள்ளதாக அனுமானிக்கப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல்வாங்கல் அறிவுறுத்தலையும் சரிபார்த்து உறுதி செய்யும் கடப்பாடு கார்கில்ஸ் வங்கிக்கு கிடையாது. வாடிக்கையாளரின் கணக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளையும் கண்காணித்தல் மற்றும் பேணிப் பாதுகாத்தலுக்கான முழுப்பொறுப்பையும் வாடிக்கையாளரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

V. இணையச் சேவைகள் தவிர வேறு எந்த வழியிலும் கார்கில்ஸ் வங்கியின் கணினிகளில் பேணப்படுகின்ற ஏனைய தகவல் மற்றும் விபரங்களை அடையப்பெறுவதற்கு பாவனையாளர் முயற்சிக்காமல் இருப்பதை வாடிக்கையாளர் உறுதி செய்தல் வேண்டும். அனுமதியற்ற நபர்கள் தனது கணக்கினை(கணக்குகளை) அடையப்பெறுவதற்கு அனுமதிக்காமல் இருப்பதை வாடிக்கையாளர் உறுதி செய்தல் வேண்டும்.

VI. கார்கில்ஸ் வங்கியில் மூன்றாம் தரப்பினர் கொண்டுள்ள கணக்குகள் அல்லது கார்கில்ஸ் வங்கிக்கும் எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் தொடர்பில் கார்கில்ஸ் வங்கியின் கணினிகளில் பேணப்படுகின்ற தகவல் விபரங்களை இணையச் சேவைகளின் அங்கமாக வழங்கப்படுகின்ற வசதிகளை உபயோகித்து அடையப்பெற முயற்சிப்பதை பாவனையாளர் மேற்கொள்ளாதிருப்பதை வாடிக்கையாளர் உறுதிப்படுத்த வேண்டும்.

VII. வாடிக்கையாளரால் முன்னெடுக்கப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை சரிபார்த்து, அங்கீகரிக்கும் நோக்கத்திற்கு வாடிக்கையாளர் கடவுச்சொல் பயன்படுகின்றது என்பதையும், வாடிக்கையாளரின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பத்தின் மாதிரி கையொப்பத்தின் அதே விளைவைக் கொண்டிருக்கும் என்பதையும், வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லை உபயோகித்து மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கு வாடிக்கையாளரே பொறுப்பு என்பதையும் வாடிக்கையாளர் விளங்கிக் கொண்டு, ஏற்றுக்கொள்கின்றார்.

VIII. பாவனையாளர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதை கார்கில்ஸ் வங்கி தனது வாடிக்கையாளருக்கு அறிவுறுத்தும்:

a) வாடிக்கையாளர்/பாவனையாளர் அடையாளச் சொல் மற்றும் வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் ஆகியவற்றை இரகசியமாகப் பேணுவதுடன், வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லை எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கும் வெளிப்படுத்தாதிருத்தல்.

b) பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற வாடிக்கையாளரின் நேரடி தனிப்பட்ட விபரங்கள் போன்றவை தொடர்புபடாத அல்லது எழுத்துக்கள் மற்றும் இலக்கங்களின் வேறு எந்தவொரு இலகுவான இணைப்பாகவும் அமையாத வகையில் குறைந்த பட்சம் 6 எழுத்துக்களைக் கொண்ட வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லொன்றைத் தேர்ந்தெடுத்தல்.

c) வாடிக்கையாளர்/பாவனையாளர் அடையாளச் சொல் மற்றும் வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் ஆகியவற்றை வாடிக்கையாளரின்/பாவனையாளரின் நினைவில் வைத்துக் கொள்வதுடன், எழுத்து வடிவில் அல்லது இலத்திரனியல் வடிவில் பதிவு செய்து பேணுவதை தவிர்த்தல்.

d) வாடிக்கையாளரின் கணினியை அனுமதியின்றிய எந்தவொரு நபரும் உபயோகிக்க இடமளிக்காது விடுவதுடன், எந்தவொரு உற்பத்தி மற்றும்/அல்லது சேவையை அல்லது இணையத்தளத்தை அடைந்து கொள்கின்ற சமயத்தில் கணினியை கவனிக்காது அப்படியே விட்டுவிடுவதை தவிர்த்தல்.

**e)** பாவனையாளர் தனக்குரிய வாடிக்கையாளர்/பாவனையாளர் அடையாளச் சொல்ல அல்லது வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்

ஆகியவற்றை மறந்து போனால் அல்லது தொலைத்து விட்டால், கார்கில்ஸ் வங்கிக்கு முறையாக அங்கீகரிக்கப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கையை கார்கில்ஸ் வங்கிக்கு அனுப்பி வைப்பதன் மூலமாக வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல்லை மாற்றிக் கொள்வதற்கான கோரிக்கையை வாடிக்கையாளர் விடுக்க முடியும்.

## 6. வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள் போன்றவை

வாடிக்கையாளர்/பாவனையாளர் அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லை உபயோகித்து விடுக்கப்படுகின்ற எந்தவொரு அறிவுறுத்தல், கட்டளை, வழிகாட்டல் மற்றும் கோரிக்கை ஆகியன வாடிக்கையாளர் அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட அவரது பிரதிநிதி அல்லது வாடிக்கையாளரால் முறையாக அங்கீகரிக்கப்பட்டு நியமிக்கப்பட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற அறிவுறுத்தல், கட்டளை, வழிகாட்டல் மற்றும் கோரிக்கை என்றே கருதப்படும். இலத்திரனியல்ரீதியாக அல்லது வேறு வடிவில் வாடிக்கையாளரால் விடுக்கப்படுகின்ற அனைத்து அறிவுறுத்தல், கட்டளை, வழிகாட்டல் மற்றும் கோரிக்கை என்பன வாடிக்கையாளரின் தீர்மானத்தின் அடிப்படையில் அல்லது வாடிக்கையாளரின் முழுமையான பொறுப்பின் அடிப்படையில் விடுக்கப்படுபவை. இலத்திரனியல்ரீதியாக அல்லது வேறு வடிவில் வாடிக்கையாளரால் விடுக்கப்படுகின்ற அனைத்து அறிவுறுத்தல், கட்டளை, வழிகாட்டல் மற்றும் கோரிக்கை என்பன அத்தகைய அறிவுறுத்தல், கட்டளை, வழிகாட்டல் மற்றும் கோரிக்கை என்பன நிறைவேற்றப்படும் என்பதற்கான உத்தரவாதம் கிடையாது என்பதை வாடிக்கையாளர் விளங்கிக் கொள்கின்றார். எந்தவொரு அறிவுறுத்தல், கட்டளை, வழிகாட்டல் மற்றும் கோரிக்கை ஆகியன இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டு கட்டமைப்பில் “கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது” என்ற செய்தி காண்பிக்கப்பட்டு, இலத்திரனியல்ரீதியாக வாடிக்கையாளருக்கு கிடைக்கப்பெறும் வரை அவை கார்கில்ஸ் வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருத முடியாது.

## 7. கட்டணங்கள்

வர்த்தக இணைய வங்கிச் சேவை மற்றும் ஏனைய சேவைகளின் பயன்பாட்டிற்காக கார்கில்ஸ் வங்கி கட்டணங்களை அறவிடக்கூடும் என்பதுடன், இது தொடர்பில் கார்கில்ஸ் வங்கி அவ்வப்போது வாடிக்கையாளருக்கு அறியத்தரும். அத்தகைய சேவைக் கட்டணங்களில் ஏற்படும் மாற்றங்களும் வாடிக்கையாளருக்கு அறியத்தரப்படும் அல்லது/மற்றும் இணையத்தில் வங்கியின் கட்டண விபரங்கள் புதுப்பிக்கப்படும். கார்கில்ஸ் வங்கியால் அவ்வப்போது

தீர்மானிக்கப்படுகின்ற வர்த்தக இணைய வங்கிச்சேவை தொடர்பான அனைத்து கட்டணங்களையும் கார்கில்ஸ் வங்கி அறவிடுவதற்கு வாடிக்கையாளர் அதற்கு அனுமதி அளிப்பதுடன், வாடிக்கையாளரின் கணக்குகளில் ஒன்றில் அதனை பற்றுச் செய்வதற்கும் அனுமதி அளிக்கின்றார். மேற்குறிப்பிட்டவாறு எவ்வேளையிலும் வைப்புத் தொகையானது தேவைப்படும் குறைந்தபட்ச தொகையை விட குறைவாக இருக்கும் பட்சத்தில் மற்றும்/அல்லது சேவைக் கட்டணங்கள் தொடர்ந்தும் செலுத்தப்படாமல் இருக்கும் பட்சத்தில் வாடிக்கையாளருக்கு எவ்விதமான முன்னறிவித்தலையும் வழங்காது இணைய வங்கிச்சேவைகளை கார்கில்ஸ் வங்கி மீளப்பெறுவதுடன் மற்றும்/அல்லது அவ்வாறு மீளப்பெறுவதால் எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் ஏற்படுகின்ற எவ்விதமான பொறுப்பினையும் வங்கி ஏற்றுக்கொள்ளாது.

## 8. நிதிப் பரிமாற்றம்

உரிய கணக்கில் போதுமான நிதியின்றி அல்லது மேலதிகப் பற்று எனில் கார்கில்ஸ் வங்கியுடன் அதற்கான முற்கூட்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளாது வர்த்தக இணைய வங்கிச்சேவையை உபயோகித்து நிதிப் பரிமாற்றம் செய்வதற்கு வாடிக்கையாளர் அதனை உபயோகித்தல் கூடாது அல்லது உபயோகிக்க முயற்சிக்கக் கூடாது. கணக்கில் போதுமான நிதி கிடைக்கப்பெறுகின்ற பட்சத்தில், வர்த்தக இணைய வங்கிச்சேவையினூடாக பெற்றுக்கொள்ளப்படுகின்ற அத்தகைய நிதிப் பரிமாற்றங்களை நிறைவேற்றுவதற்கு கார்கில்ஸ் வங்கி உரிய நடவடிக்கைகயை மேற்கொள்ள முயற்சி எடுக்கும். கார்கில்ஸ் வங்கியின் நியாதிக்கமான கட்டுப்பாட்டிற்கு அப்பாலான சூழ்நிலைகள் காரணமாக அனைத்து அல்லது எந்தவொரு கொடுப்பனவுகளை அல்லது காலம் தாழ்த்திய கொடுப்பனவுகளை மேற்கொள்ள தவறுவதற்கு கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக் கொள்ளாது.

நிதிப்பரிமாற்றம் செய்யும் வசதிக்கு வாடிக்கையாளருக்கு இடமளிக்கப்பட்டால், வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து வாடிக்கையாளருக்கு சொந்தமான ஏனைய கணக்குகளுக்கு அல்லது கார்கில்ஸ் வங்கியில் மூன்றாம் தரப்பினரால் பேணப்படுகின்ற கணக்குகளுக்கு மற்றும்/அல்லது Lanka Clear (Pvt) Limited நிறுவனத்தின் இலத்திரனியல் நிதிப்பரிமாற்ற முறைமை (SLIPS & CEFT) வலையமைப்பின் கீழுள்ள வேறு எந்தவொரு வங்கிக்கும் நிதியை மாற்றிக் கொள்வதற்கு உபயோகிக்க முடியும். வாடிக்கையாளரின் சார்பில் குறிப்பாக அனுமதிக்கப்பட்டுள்ள அத்தகைய பாவனையாளர் ஒருவரே நிதிப் பரிமாற்ற வசதியை உபயோகிக்க முடியும். வாடிக்கையாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆணை/தீர்மானத்திற்கு இணங்க வர்த்தக இணைய வங்கிச்சேவையை

உபயோகித்து நிதிப் பரிமாற்றம் செய்வதற்கு அத்தகைய பாவனையாளர் அனுமதிக்கப்படுவார். வாடிக்கையாளரால் வழங்கப்படும் ஆணையில் நிதிப்பரிமாற்றம் செய்யப்படக்கூடிய அதிகூடிய தொகை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். வர்த்தக இணைய வங்கிச்சேவையினூடாக இலங்கை மத்திய வங்கியால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள விசேட ரூபா கணக்குகளுக்கு (SIA, OIA, MBA போன்றவை) வரவு வைக்கப்படாது என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

## 9. சர்வதேச வர்த்தகம் தொடர்பான

## பொது உடன்படிக்கை

### 9.1.வரைவிலக்கணங்கள்

"**ஆவணக் கடன்**" என்பது கோரிக்கையின் பிரகாரம் அல்லது வாடிக்கையாளரின் கணக்கிற்காக வங்கியால் விநியோகிக்கப்படுகின்ற அல்லது உறுதிப்படுத்தப்படுகின்ற மற்றும் அத்தகைய கடனை வழங்குவதற்கு வங்கியால் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு உறுதிப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளரின் கோரிக்கையின் பிரகாரம் நீட்டிக்கப்பட்ட அல்லது திருத்தம் செய்யப்பட்ட அத்தகைய கடன் அல்லது உறுதிப்படுத்தல் தொடர்பான ஒரு ஆவணம்;

"**ஆவணங்கள்**" என்பது வழக்கமான வங்கிச் சேவை வர்த்தகத்திற்கு அமைவாக அல்லது அவ்வாறு அல்லாமல் பாதுகாப்பிற்கு அல்லது வேறு எந்தவொரு காரணத்திற்காகவும் வங்கியின் கட்டளைக்கு அமைவாக அல்லது வங்கியால் தனது கட்டுப்பாட்டில் வைத்துப் பேணப்படுகின்ற பொருட்கள் மற்றும்/அல்லது பொருட்கள் மற்றும்/அல்லது ஆவணங்களை முன்வைக்கின்றமை தொடர்புபட்ட அனைத்து முறிகள், முதன்மை ஆவணங்கள், போக்குவரத்து ஆவணங்கள், காப்புறுதிக் கொள்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்களைக் குறிக்கின்றது;

“**நாணய மாற்று வீதம்**” என்பது உரிய வெளிநாட்டு நாணய மாற்று சந்தையில் நிலவுகின்றவாறு வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் ஒரு நாணயத்திலிருந்து மற்றுமொரு நாணயத்திற்கு மாற்றம் செய்யும் வீதத்தைக் குறிப்பதுடன், அத்தகைய தீர்மானமானது உறுதியானது என்பதுடன், வாடிக்கையாளர் அதற்கு கடப்பாடு உடையவர் ஆகின்றார்;

“**வசதி**” மற்றும் “**வசதிகள்**” என்பது முற்பணங்கள், ஆவண கடன் விநியோகம், கப்பல் பண்ட போக்குவரத்து உத்தரவாத விநியோகம் அல்லது பொருட்கள் தொடர்பான ஏனைய உத்தரவாதங்களின் வடிவில் வாடிக்கையாளருக்கு அல்லது வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் எந்தவொரு நபருக்கும் வங்கி வழங்குகின்ற அல்லது தொடர்ந்தும் வழங்குகின்ற அத்தகைய வசதி அல்லது வசதிகளைக் குறிக்கின்றது;
அத்தகைய வசதிகளின் குறிப்பிட்ட விதிமுறைகள் வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையில் உரிய கடன் மற்றும்/அல்லது கடன் வசதி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன

“**பொருட்கள்**” என்பது ஆவணங்களுடன் தொடர்புபட்ட பொருட்கள் மற்றும்/அல்லது உற்பத்திகளை குறிக்கின்றது;

“**நபர்**” என்பது தனிநபரை, ஸ்தாபனத்தை, நிறுவனத்தை, கூட்டுத்தாபனத்தை மற்றும் கூட்டிணைப்புச் செய்யப்படாத நபர்களின் கூட்டினை உள்ளடக்கியுள்ளது;

“**பாதுகாக்கப்பட்ட பணங்கள்**” என்பது (i) எந்தவொரு கடன் வசதியின் கீழும் வாடிக்கையாளர் கொண்டுள்ள எவ்விதமான கடன்பட்ட நிலை மட்டுமன்றி, தனியாகவோ அல்லது வேறு எந்தவொரு நபருடனும் கூட்டாகவோ எந்தவொரு நிலையிலும் எவ்வேளையிலும் உண்மையாக அல்லது அமைய வாய்ப்புள்ள வகையில் வாடிக்கையாளர் வங்கியில் எந்தவொரு நாணயத்திலும் கடனான கொண்டுள்ள அனைத்து பணங்களையும், (ii) வாடிக்கையாளரால் செலுத்தப்படவேண்டிய வீதத்தில் அல்லது செலுத்தப்பட்டிருக்க வேண்டிய ஆனால் ஏதோவொரு சூழ்நிலை காரணமாக கொடுப்பனவை மேற்கொள்ள முடியாத நிலையில் வங்கி கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் திகதியில் அத்தகைய பணங்களின் மீதான வட்டி (எந்தவொரு கோரிக்கை அல்லது தீர்ப்பிற்கு முன்னர் மற்றும் பின்னர்) (iii) செலுத்தப்பட வேண்டிய நேரத்தில் அத்தகைய கொடுப்பனவை வாடிக்கையாளர் மேற்கொள்ளத் தவறுவதன் விளைவாக வாடிக்கையாளரின் சார்பில் (எனினும் அவ்வாறு செயற்படுவதற்கான எவ்விதமான கடப்பாட்டையும் வங்கி கொண்டிராத போதிலும்) இந்த உடன்படிக்கையின் கீழ் வங்கிக்கு ஏற்படுகின்ற எந்தவொரு

செலவு மற்றும் (iv) இந்த உடன்படிக்கையின் கீழ் வங்கி தனது உரிமைகளை முழுமையாக்கும் அல்லது செயற்படுத்துவது தொடர்பான அனைத்து செலவுகள்.

**9.2. பிரயோகம்**

**9.2.01** இந்த உடன்படிக்கையானது வங்கி தனது தீர்மானத்திற்கு அமைவாக எந்தவொரு வசதிக்கும் அல்லது உரியது என வங்கி கருதுகின்ற எந்தவொரு நடவடிக்கைக்கும் பிரயோகிக்கப்படும்.

**9.2.02** இந்த உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன எந்தவொரு தனிப்பட்ட ஆவணக் கடன் மற்றும் குறிப்பிட்ட எந்தவொரு வசதிக்கும் உரிய வகையில் வங்கியால் குறிப்பிடப்படுகின்ற அத்தகைய ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.

**9.2.03** அவ்வப்போது நடைமுறையில் உள்ளவாறு சர்வதேச வர்த்தக சம்மேளத்தின் ஆவண கடன்களுக்கான ஒத்த வழக்கங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு ஒவ்வொரு ஆவணக் கடனும் அமைவானது.

**9.2.04** சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் ஆவணக் கடன்களுக்கான அவ்வப்போதான ஒத்த வழக்கங்கள் மற்றும் நடைமுறைகள் மற்றும் இந்த ஆவணத்திற்கிடையில் ஏதாவது பிணக்குகள் எழுகின்ற பட்சத்தில் மற்றும்/அல்லது வசூலிப்புக்களுக்கான சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் விதிமுறைகள் தொடர்பாக பிணக்குகள் எழுகின்ற பட்சத்தில் இந்த உடன்படிக்கையே அதிகாரம் கொண்டதாக அமையும்.

**9.3. இறக்குமதிகளுக்கான ஆவணக் கடன்**

**9.3.01** ஒவ்வொரு ஆவணக் கடனையும் அதன் விதிமுறைகளுக்கு இணங்க அவற்றை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் வங்கிக்கு உள்ளது.

**9.3.02** எந்தவொரு ஆவணக் கடனையும் அதன் மறு முனை வங்கி அல்லது அதன் தெரிவின் கீழாக முகவரின் கீழ் பேரம் பேசலில் ஈடுபடுவதை வங்கி கட்டுப்படுத்தக்கூடும் என்பதுடன், அத்தகைய எந்தவொரு அலுவலகம், மறு முனை வங்கி அல்லது அதன் தெரிவின் கீழான முகவரின் பெயரில் வரையப்பட்டுள்ள

அனைத்து ஆவணங்கள் அல்லது விடுக்கப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்று அங்கீகரிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**9.3.03** எந்தவொரு ஆவணக் கடன் தொடர்பிலும் செலுத்த வேண்டிய தொகைக்கு சமமான தொகையை செலுத்த வேண்டிய திகதிக்கு பிந்தாமல் வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

### 9.4. ஏற்றுமதி ஆவணங்கள்

**9.4.01** ஆவணக் கடனை வங்கி உறுதி செய்தால், எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் கொடுப்பனவை மேற்கொள்ளாது விட்டால், அல்லது குற்றம் சுமத்தப்பட்டால், மோசடி (எந்தவொரு நபரின் பாகத்திலும்) அல்லது கடன் ஆவணத்தை பாதிக்கின்ற ஏனைய சட்டவிரோத செயற்பாடு காரணமாக வாடிக்கையாளரிடமிருந்து முழுமையான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**9.4.02** சரத்து 4.01 இற்கு உட்பட்டதாக அமைந்தாலன்றி, ஆவணக் கடனை வங்கி உறுதிப்படுத்திய பின்னர் செலுத்த வேண்டிய திகதியில் புறக்கணிக்கப்பட்ட அல்லது செலுத்தப்படாத ஆவணக் கடனின் கீழ் வரையப்பட்ட அல்லது வரையப்படாத, வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது முறிகளின் கீழ் பேரம் பேசப்பட்ட தொகைக்கு சமமான தொகையை செலுத்த வேண்டிய திகதிக்கு பிந்தாமல் வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

**9.4.03** ஆவணக் கடனின் கீழ் வரையப்பட்ட அல்லது வரையப்படாத எந்தவொரு முறி தொடர்பிலும் பொருத்தமானது என வங்கி கருதுகின்ற அத்தகைய நிலைமைகளை தனது தற்துணிபின் பிரகாரம் வங்கி அங்கீகரிக்கும்

(a) நிபந்தனையுடன் ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது செலுத்துவதை ஏற்றுக்கொள்வதற்கு மற்றும்/அல்லது கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியை நீட்டிப்பதற்கு;

(b) மீளளிப்பு அல்லது தள்ளுபடியின் கீழ் முதிர்வடைவதற்கு முன்பதாக பெறுவோர் அல்லது ஏற்றுக்கொள்வோரிடமிருந்து கொடுப்பனவை ஏற்றுக்கொள்ளல்;

(c) முதிர்வடைவதற்கு முன்பதாக பகுதியளவு கொடுப்பனவை ஏற்றுக்கொள்ளல் மற்றும் முறிகளை பெற்றுக்கொள்வோர் அல்லது ஏற்றுக்கொள்வோர் அல்லது பொருட்களைப் பெற்றுக்கொள்வோருக்கு பொருட்களை பகுதியளவில் விநியோகித்தல்;

(d) எந்தவொரு முறியையும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிப்பத்தை தாமதிக்குமாறு பெற்றுக்கொள்வோர் விடுக்கும் கோரிக்கை அல்லது அத்தகைய முறி தொடர்பில் வங்கி மீது வாடிக்கையாளர் கொண்டுள்ள பொறுப்பினை பாதிக்காது ஏற்றுக்கொள்ளல்;
(e) அத்தகைய முறியின் தொகையை வாடிக்கையாளரின் கணக்கில் வங்கி பற்றுச் செய்துள்ளமைக்கு மத்தியிலும் அத்தகைய முறி தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய எந்தவொரு தொகையையும் ஏற்றுக்கொள்பவர்கள் அல்லது ஒப்புதல் அளிப்பவர்களிடமிருந்து அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை அற்றும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

**9.4.04** முறையாக சமர்ப்பிக்கப்படாத எந்தவொரு ஆவணத்திற்கும் எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் அல்லது அது தொடர்பில் வங்கிக்கு முறையாக செலுத்தப்படாத கொடுப்பனவை வங்கியின் கோரிக்கைக்கு அமைவாக வாடிக்கையாளர் மீளச் செலுத்த வேண்டும்.

**9.5. வசூலிப்புக்கள்**

**9.5.01** வசூலிப்பை மேற்கொள்ளுமாறு வங்கியிடம் கோரப்பட்டால் உரிய முறி, வரைபு அல்லது ஆவணத்தின் முழுமையான கொடுப்பனவை வங்கி வசூலித்து மற்றும் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் நிபந்தனை அடிப்படையில் இச்சேவையை வழங்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**9.5.02** வங்கியால் அத்தகைய வசூலிப்பு மற்றும் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படா விட்டால் அத்தகைய சேவை தொடர்பான எந்தவொரு தொகையையும் வங்கியின் கோரிக்கைக்கு அமைவாக வாடிக்கையாளர் வங்கிக்கு மீளச் செலுத்த வேண்டும்.

**9.5.03** ஒவ்வொரு வசூலிப்பும் சர்வதேச வர்த்தக சம்மேளனத்தால் அவ்வப்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டது.

**9.6. பிணை**

**9.6.01** வசதிகளை வழங்குவதை கருத்தில் கொள்ளும் சமயத்தில் உரிய பணத் தொகை செலுத்தப்படும் அல்லது விடுவிக்கப்படும் வரை ஆவணங்கள் மற்றும் பொருட்கள் மீதான பிணையாக உத்தரவாதம் மற்றும் சொத்து உறுதிப்பாட்டை வங்கி கொண்டிருக்கும்.

**9.6.02** வங்கி கொண்டுள்ள ஏனைய பிணைகளுக்கு மத்தியில் அதற்கு மேலதிகமாக, அதன் மீது எவ்விதமான பாதிப்பும் இன்றி நடைமுறைப்படுத்தப்படுத்தப்படக்கூடிய தொடர்ச்சியான பிணையாக இது அமையும். பிணைகளை கூட்டுச் சேர்க்கும் உரிமை தொடர்பான எவ்விதமான கட்டுப்பாடும் இந்த பிணைக்கு பொருந்தாது.

**9.6.03** (i) எந்த ஆவணம் தொடர்பிலும் ஏற்றுக்கொள்ள அல்லது கொடுப்பனவை மேற்கொள்ள தவறும் பட்சத்தில் அல்லது (ii) செலுத்தப்படவேண்டிய நேரத்திற்கு எந்தவொரு பிணைத் தொகையையும் வாடிக்கையாளர் செலுத்த தவறினால் அல்லது இந்த உடன்படிக்கையின் எந்தவொரு விதிமுறைகளின் கீழ் தவறினால் அல்லது பொருட்கள் தொடர்பான நம்பிக்கைப் பெறுதியை மேற்கொள்ள தவறினால் அல்லது (iii) வாடிக்கையாளர் அல்லது ஆவணத்தின் எந்தவொரு பெறுனர் அல்லது ஏற்றுக்கொள்பவர் செலுத்த வேண்டிய நேரத்தில் செலுத்த முடியாது என ஏற்றுக்கொண்டால் அல்லது எவ்விதமான சட்ட நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டால் அல்லது திவால், கடனறு நிலை, மூடப்படும் நிலைக்கு இணையான அல்லது அதன் எந்தவொரு சொத்துக்கும் எதிராக சட்ட நடவடிக்கை விதிக்கப்பட்டால் அல்லது அமுல்படுத்தப்பட்டால் அல்லது (iv) ஆவணங்கள் மற்றும்/அல்லது பொருட்களுக்கு எதிரான உரிமைகள் தொடர்பில் வங்கியின் நலனை பாதிக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கை அல்லது அச்சுறுத்தல் அல்லது (v) பொருட்களை விற்பனை செய்வதற்கு வங்கி தனது விருப்பின் பேரில் தீர்மானித்தல், வங்கி தனது உறுதிமொழியை அமுலாக்கம் செய்வதற்கு தகைமையை கொண்டிருத்தல், வாடிக்கையாளர் அல்லது எந்தவொரு நபரின் கோரிக்கை, அறிவிப்பு, சட்ட நடவடிக்கை அல்லது வேறு எந்த செயற்பாடு தொடர்பிலும் எவ்வேளையிலும், எவ்விதத்திலும் ஆவணங்கள் மற்றும் பொருட்கள் முழுவதையும் அல்லது சிலவற்றை பணமாக்க, விற்பனை செய்ய, பேரம் பேச அல்லது வேறு எவ்விதத்திலும் விற்பனை செய்து அகற்றுவதற்கு, எவ்விதமான கட்டுப்பாடுகள் மற்றும் இழப்பீட்டுக் கோரல்களிலிருந்து வங்கிக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய பணமாக்கல், விற்பனை, பேரம் பேசல் அல்லது அப்புறப்படுத்தல் விற்பனை காரணமாக ஏற்படுகின்ற எந்தவொரு இழப்பிற்கும் வங்கி பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டாது.

**9.6.04** பொருட்களுக்கான செலுத்தப்படாத விற்பனையாளரை வாடிக்கையாளர் கொண்டிருக்கும் போது எந்தவொரு உரிமையையும் வாடிக்கையாளர் வங்கிக்கு அளிக்கின்றார்.

**9.6.05** பிணைத் தொகைகள் அனைத்தும் செலுத்தப்படும் வரை அல்லது வெளியேற்றம் செய்யப்படும் வரை பிணைத் தொகைகள் அனைத்திலும் இந்த உடன்படிக்கையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து உத்தரவாதம்/சொத்து/உரிமை/அடமானம் ஆகியன அடிப்படைக் கடன் ஆகின்றன.

## 9.7. உத்தரவாதம் அல்லது சொத்து உரிமையின் கீழ் ஆவணங்கள் அல்லது பொருட்களை விடுவித்தல்

வாடிக்கையாளருக்கு அல்லது அவரது கட்டளைக்கு ஆவணங்களை அல்லது பொருட்களை விடுவித்தால், சந்தைப் பெறுமானத்தில் வழக்கமான வாணிப விதிமுறைகளின் பிரகாரம் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டவாறு வாடிக்கையாளர் பிரத்தியேகமாக தமது விற்பனை நோக்கத்திற்கு அல்லது ஏனைய ஏற்பாடுகளுக்கு வாடிக்கையாளரால் பேணப்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பங்களில் (விநியோகத்தின் போது நம்பிக்கை ரசீது கைச்சாத்திட்டாலோ அல்லது கைச்சாத்திடா விட்டாலோ) ஆவணங்கள், பொருட்கள் மற்றும் அதன் மூலமான விற்பனைகள் வங்கியில் நம்பிக்கை நிமித்தம் நிறுத்தி வைக்கப்படுவதுடன், ஏகபோகமாக வங்கியின் கட்டளைக்கு உட்பட்டது. அத்தகைய விற்பனைகள் அனைத்தும் வேறாகப் பேணப்படுவதுடன், பெறப்பட்டவுடன் உடனடியாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியதுடன், எந்தவொரு நபரிடமிருந்தும் அத்தகைய விற்பனைகளை கோரும் மற்றும்/அல்லது பெற்றுக்கொள்ளும் அதிகாரம் வங்கிக்கு உள்ளது.

## 9.8. பொறுப்பெடுத்தல்

**9.8.01** பின்வருவனவற்றை வாடிக்கையாளர் பொறுப்பேற்றுக்கொள்கின்றார்:

(a) ஆவணங்கள் மற்றும் பொருட்கள் வாடிக்கையாளரின் ஏகபோக பயன் உரிமையாண்மையாக அமைவதுடன், வங்கியின் பேரில் வழங்கப்பட்டுள்ள உத்தரவாதம் தவிர்ந்த எந்தவொரு இடர்பாடுகள் மற்றும் இழப்பீட்டு கோரல்களிலிருந்து விடுபட்டது;

(b) வங்கியின் தேவைக்கேற்றவாறு காப்புறுதி செய்யப்படக்கூடிய அனைத்து ஆபத்துக்களும் எதிராக அவற்றின் முழுமையான பெறுமதிக்கு பொருட்கள் காப்புறுதி செய்யப்படுவதுடன், அவ்வாறு வங்கி கோரினால் வங்கியின் நலனில் பேரில் உரிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பொருட்கள் ஒப்புதல் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளை

மேற்கொண்டு, எந்த விதமான சேதம் அல்லது இழப்பின் போது காப்புறுதியாளர் கொடுப்பனவை வங்கிக்கு நேரடியாக செலுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்;

(c) பொருட்களின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து காப்புறுதி வருமதிகளையும் வங்கிக்கு செலுத்துவதுடன், நிலுவையாகவுள்ள கொடுப்பனவு தொடர்பில் வங்கியின் நம்பிக்கையின் பேரில் அத்தகைய வருமதிகளை வங்கியின் சார்பில் பிடித்து வைத்திருந்தல்;

(d) ஆவணங்களை வங்கியின் பெயரில் ஒப்புதல் அளிப்பதுடன், ஆவணங்களை வங்கியிடம் அல்லது அதன் கட்டளைப் பிரகாரம் வைப்புச் செய்து, ஆவணங்கள் மற்றும் பொருட்களை வங்கியின் நலனின் பேரில் பதிவு செய்தல்;

(e) பொருட்களின் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அனைத்து செலவுகள் மற்றும் தற்செயலான செலவுகள் அனைத்தையும் செலுத்துதல்;

(f) பொருட்களின் கொள்வனவு நடவடிக்கையை பூர்த்தி செய்வதில் கொள்வனவாளரின் ஆற்றலை பாதிக்கக்ககூடிய விடயங்கள் தொடர்பில் அறிந்து கொண்டால் அது தொடர்பில் வங்கிக்கு அறிவித்தல்;

(g) ஆவணங்கள் மற்றும்/அல்லது பொருட்களின் பேரில் வங்கியால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய எந்தவொரு உத்தரவாதம், இழப்பீடு அல்லது ஏனைய உறுதிமொழியிடமிருந்து வங்கியை உடனடியாக விடுவிப்பதை ஏற்றுக்கொள்ளல்;

(h) வங்கியின் அறிவுறுத்தல்கள் அல்லது எழுத்து மூலமாக முற்கூட்டிய ஒப்புதல் தவிர ஆவணங்கள் மற்றும்/அல்லது பொருட்களை மட்டுப்படுத்த, பரிமாற்றம் செய்ய, விற்பனை செய்ய, அப்புறப்படுத்த அல்லது வேறு ஒப்பந்தங்களை ஏற்படுத்த முயற்சிக்கக்கூடாது;

(i) வாடிக்கையாளர் அல்லது ஏனைய நபர்களின் ஏனைய உடமைகளிலிருந்து வேறுபடுத்தி பொருட்களை வைத்துப் பேணல்;

(j) வங்கியின் முற்கூட்டிய எழுத்து மூலமான ஒப்புதல் அல்லாமல் பொருட்கள் பதப்படுத்த அல்லது மாற்றம் செய்யப்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது மற்றும்

(k) பொருட்களின் பெறுமதியை பாதிக்கின்ற மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தத்தின் உறுதிமொழியின் திறனை பாதிக்கின்ற எவ்விதமான செயற்பாட்டையும் முன்னெடுக்கக்கூடாது.

**9.8.02** வங்கி கோருகின்ற பட்சத்தில் பின்வருவனவற்றை நிறைவேற்றுவேன் என வாடிக்கையாளர் பொறுப்பெடுத்துக் கொள்கின்றார்:

(a) ஆவணங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பான மற்றும் வங்கி கோருகின்றவாறு உத்தேசிக்கப்பட்டுள்ள பொருட்களின் விற்பனை தொடர்பான தகவலை வங்கிக்கு வழங்குதல்;

(b) பொருட்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளன மற்றும் அதன் நிலைமைகள், தரம் அல்லது அளவு தொடர்பான மாற்றங்களை வங்கிக்கு அறியத்தருதல் மற்றும்
(c) இந்த உடன்படிக்கையின் கீழ் வங்கி தனது அதிகாரங்கள் மற்றும் உரிமைகளை நிலைநாட்டுவது தொடர்பில் நடைமுறைக்கு ஏற்றது என வங்கி கருதுகின்ற வகையில் அத்தகைய ஆவணங்களை முடிவுறுத்தல் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

**9.9. அதிகாரம் வழங்குதல்**

வாடிக்கையாளர் வங்கிக்கு பின்வரும் அதிகாரங்களை அளிக்கின்றார்:

(a) இந்த வசதிகள் தொடர்பில் தனது நிருபராக, வேட்பாளராக அல்லது முகவராக எந்தவொரு நபரையும் நியமிப்பது மற்றும் இந்த உடன்படிக்கையின் கீழ் வங்கி தனது எந்தவொரு அதிகாரத்தையும் அத்தகைய நபரிடம் ஒப்படைத்தல்;

(b) இந்த உடன்படிக்கையின் கீழ் வாடிக்கையாளர் தனது கடப்பாடுகளை இணங்குவதை மீறும் போது அதற்கான தீர்வாக வாடிக்கையாளரின் செலவில் தேவை என கருதும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் அற்றும் அத்தகைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்;

(c) எவ்வேளையிலும் பொருட்களை ஏற்றுவதற்காக மற்றும் அவற்றை ஆய்வு செய்வதற்காக அவற்றை இறக்கி வைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல்;

(d) ஆவணங்கள் மற்றும் பொருட்களின் வேறு எந்த நபரினதும் நலன் தொடர்பில் அறியத்தருதல்;

(e) வாடிக்கையாளரின் அல்லது வேறு நபரின் மேற்கோள் அல்லது மேலதிக அதிகாரமின்றி செல்லுபடி தொடர்பான விசாரணையின்றி அல்லது எந்தவொரு ஆவணம், இழப்பீட்டுக் கோரல் அல்லது கேள்வி தொடர்பான விசாரணையின்றி (வாடிக்கையாளர் பிணக்கினைக் கொண்டுள்ளரா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால்) ஆவணங்கள் மற்றும்/அல்லது பொருட்கள் பேரில் வங்கியால் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு ஆவண கடன், உத்தரவாதம், இழப்பீடு அல்லது பிற உத்தரவாதத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய அல்லது கேள்வியின் பேரில் உடனடியாக கொடுப்பனவை மேற்கொள்ளல் மற்றும் வங்கி மேற்கொள்ளும் கொடுப்பனவு வாடிக்கையாளரின் பேரில் கடப்பாடு கொண்டது

**9.10. பொறுப்பு மற்றும் இழப்பீடு மீதான வரம்பு**

**9.10.01** வங்கி, அதன் அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் வேண்டுமென்றே மேற்கொண்ட அலட்சியம் காரணமாக அன்றி, ஆவணங்களின் அல்லது பொருட்களின் சார்பில் அல்லது பொருட்களின் நிலைமை, அளவு அல்லது பெறுமதி தொடர்பில் வங்கியின் அல்லது வேறு எந்தவொரு நபரின் பக்கத்தில் எந்தவொரு செயற்பாடு, தாமதம் அல்லது செயற்பட தவறுதல் ஆகியவற்றிற்கு வாடிக்கையாளரோ அல்லது வேறு எந்தவொரு நபருமோ வங்கி மேல் பொறுப்பு சுமத்த முடியாது.

**9.10.02** வங்கி, அதன் அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் வேண்டுமென்றே மேற்கொண்ட அலட்சியம் காரணமாக அன்றி, இந்த உடன்படிக்கையின் கீழ் வங்கி தனது அதிகாரங்களையும், உரிமைகளையும் நிலைநாட்டுவதற்கு ஆவணங்கள் மற்றும்/அல்லது பொருட்கள் தொடர்பில் வாடிக்கையாளர்களால் அல்லது அவர்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகள் அல்லது வழக்குகள் காரணமாக ஏற்படுகின்ற அனைத்து விதமான பொறுப்புக்கள், இழப்பீட்டு கோரல் செலவுகள் மற்றும் சேதாரங்களுக்கு எதிராக வாடிக்கையாளர் வங்கி, அதன் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களிடம் இழப்பீடு கோர முடியாது.

### 9.11. வாடிக்கையாளர் அறிவுறுத்தல்கள்

**9.11.01** வசதிகள், ஆவணங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ள நபரின்(நபர்களின்) அறிவுறுத்தல்களைப் பின்பற்றி செயற்படுவதற்கு வங்கிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**9.11.02** வங்கி தனது தற்துணிபின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட நபரிடமிருந்து(நபர்களிடமிருந்து) கிடைக்கப்பெறுகின்ற அல்லது அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதாக நம்பப்படுகின்ற அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதுடன், அத்தகைய அறிவுறுத்தல்கள் தொடர்பில் நல் நோக்கில் செயற்பட்டால், அத்தகைய அறிவுறுத்தல்கள் தொடர்பில் கடப்பாடு கொண்டவர்களாக வாடிக்கையாளர்கள் காணப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட நபரின் (நபர்களின்) அறிவுறுத்தல் கிடைத்தாலோ அன்றியோ அதன் பிரகாரம் செயற்படுவதற்கான பொறுப்பு வங்கிக்கு கிடையாது என்பதுடன், அறிவுறுத்தல்களை வழங்கும் நபரின் (நபர்களின்) ஆளடையாளத்தை சரிபார்க்கும் கடமை வங்கிக்கு கிடையாது.

### 9.12. கொடுப்பனவுகள்

**9.12.01** உத்தரவாத பணத்தை முழுவதுமாக அல்லது அதன் பாகத்தை வங்கியில் வாடிக்கையாளர் பேணுகின்ற எந்தவொரு கணக்கிலும் வங்கி பற்றுச் செய்ய முடியும்.

**9.12.02** எதிரீடு, பதில் கோரல், நிறுத்தி வைத்தல் அல்லது நிபந்தனை எதுவுமின்றி வங்கியால் குறிப்பிடப்படுகின்ற கொடுப்பனவுகளை வாடிக்கையாளர் மேற்கொள்ள வேண்டும். நிறுத்தி வைத்தல் தொடர்பில் வாடிக்கையாளர் சட்டரீதியாக அதனை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படின், நிறுத்தி வைக்கப்படும் தொகை இருந்திரா விட்டால் வங்கிக்கு எவ்வளவு தொகை கிடைத்திருக்குமோ அத்தொகை வங்கிக்கு கிடைக்கும் வகையில் கொடுமதித் தொகையை வாடிக்கையாளர் அதிகரித்து நிறுத்தி வைக்கும் தொகையை வங்கிக்கு ஈடு செய்தல் வேண்டும்.

**9.12.03** பொறுப்பு தொடர்பான நாணயத்திலேயே வாடிக்கையாளர் கொடுப்பனவை வங்கிக்கு செலுத்துவதுடன், வேறு ஒரு நாணயத்தில் ஏற்றுக்கொள்வதற்கு வங்கி எழுத்து மூலமாக இணங்கினால் நாணய மாற்று வீதத்திற்கு அமைவாக வேறு நாணயத்திற்கு அது மாற்றம் செய்யப்படும்.

**9.12.04** எந்தவொரு தீர்ப்பு, நீதிமன்ற கட்டளை அல்லது வேறு எவ்விதமான நடவடிக்கைக்கு மத்தியிலும் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவானது இந்த உடன்படிக்கைக்கு அமைவாக முழுமையாகவும், பெற்றுக்கொள்ளப்பட்ட நாணயத்திலும் செலுத்தப்படும் வரை வாடிக்கையாளரின் கடப்பாடு முடிவுறாது என்பதுடன் அத்தகைய கொடுப்பனவு நாணய மாற்று வீதத்தின் பிரகாரம் உண்மையான தொகைக்கு மாற்றம் செய்யப்படும் போது வெளிப்படும் நாணயத்தின் தொகையில் குறைவு ஏற்பட்டால் அந்த குறை தொகையை செலுத்தும் கடப்பாடு வாடிக்கையாளருக்கு உண்டு.

**9.12.05** பிணைப்பணம் தொடர்பில் வங்கியில் செலுத்தப்பட்ட எந்த பணமும் அதனை பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் அல்லது அத்தகைய கணக்கில் வரவு வைக்கப்பட்டு வங்கி தனது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு பிணைப் பணம் முழுவது தொடர்பிலும் வங்கி தீர்மானிக்கும்.

**9.12.06** பிணைப் பணம் தொடர்பில் வங்கிக்கு எவ்விதமான பணமும் செலுத்தப்பட்டால், திவாலாதல், கடனறு நிலை அல்லது முடுப்பு செய்தல் தொடர்பில் எவ்விதமான சட்டங்களின் நெறிமுறைகளுக்கு அமைவாக மீளச் செலுத்த வேண்டிய தேவை

உள்ளதுடன், அவ்வாறு பணம் செலுத்தப்படாவிடில் இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**9.13. எதிரீடு**

வாடிக்கையாளரின் பெயரில் அல்லது வேறு எந்த தரப்பினதும் பெயரில் எந்தவொரு கணக்கிலும் உள்ள வரவுத் மீதியை எவ்விதமான அறிவித்தலுமின்றி எந்நேரமும் எதிரீடு செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளதுடன் மற்றும்/அல்லது பிணைப் பணத்தினை தீர்ப்பதற்காக வங்கி வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய வேறு எந்த விதமான கடப்பாட்டையும் எதிரீடு செய்ய முடியும். இந்த நோக்கத்திற்கு, அத்தகைய கணக்கில் வரவு வைப்பதற்கு நிலுவையாகவுள்ள பணத்தை பிரயோகிக்க தேவையான ஏனைய நாணயங்களை நாணய மாற்று வீதத்தில் கொள்வனவு செய்யும் அதிகாரம் வங்கிக்கு உள்ளது. வங்கியின் வேறு எந்த கடப்பாடும் அத்தகைய எதிரீட்டிற்கு பிணைப் பணத்தை உரிய நாணயத்திற்கு நாணய மாற்று வீதத்தில் அவ்வாறே மாற்றம் செய்ய வங்கியால் முடியும்.

**9.14. வாடிக்கையாளரின் கணக்குகள்**

வங்கி எந்நேரமும் வாடிக்கையாளரின் பெயரில் தற்போது பேணப்படும் கணக்கினை தொடர்ந்து தொழிற்படுவதுடன், அவரின் பெயரில் எந்தவொரு புதிய கணக்கை ஆரம்பிக்கவும் முடியும். அதனைத் தொடர்ந்து புதிய கணக்கு தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள், ரசீதுகள் அல்லது கொடுப்பனவுகள் வாடிக்கையாளர் இங்கே கொண்டுள்ள பொறுப்பினை பாதிக்கும்.

**9.16. உரிமை விட்டுக்கொடுப்பு இன்மை**

இந்த உடன்படிக்கையை தொடர்வது சம்பந்தமாக வங்கியின் எந்தவொரு நடவடிக்கையோ அல்லது விடுபாடோ இது தொடர்பான உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் பரிகாரங்களை பாதிக்காது என்பதுடன், அத்தகைய உரிமைகள், அதிகாரங்கள் அல்லது பரிகாரங்களின் வேறு எந்தவொரு நடவடிக்கையையும் பாதிக்காது.

**9.17. தொடர்பாடல்கள்**

இந்த உடன்படிக்கையின் எந்தவொரு அறிவித்தல், கோரிக்கை அல்லது பிற தொடர்பாடல்கள் வாடிக்கையாளர் வங்கியில் இறுதியாக பதிவு செய்துள்ள முகவரிக்கு எழுத்து மூலமாக அனுப்பி வைக்கப்படுவதுடன், இந்த முகவரி வங்கி தனது

அலுவலகத்திலுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதுடன் அல்லது இந்த நோக்கத்திற்காக வாடிக்கையாளருக்கு வங்கி இது தொடர்பில் அறியத்தரும் மற்றும் அத்தகைய முகவரிக்கு பிரத்தியேகமாக விநியோகம் செய்யப்படும் அல்லது அஞ்சல், தொலைநகல் மற்றும் டெலெக்ஸ் மூலமாக அனுப்பி வைக்கப்படும். பிரத்தியேகமான விநியோகத்தின் போது அல்லது அத்தகைய முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படும் பட்சத்தில் விநியோகம் செய்யப்படும் சமயத்திலும், அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படுகின்ற அல்லது அனுப்பப்பட்ட தினத்திற்கு அடுத்த தினத்திலும் தொலைநகல் அல்லது டெலெக்ஸ் மூலமாக அனுப்பி வைக்கப்படும் போது உண்மையான விநியோக தினத்திலும் அது வாடிக்கையாளருக்கு கிடைக்கப்பெற்றதாகவே கருதப்படும்.

**9.18. தனித் தனி பிரிவு**

இந்த உடன்படிக்கையிலுள்ள விதிகள் ஒவ்வொன்றும் தனித் தனியானவை மற்றும் ஏனையவற்றிலிருந்து தனித்துவமானவை என்பதுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விதிகள் சட்டவிரோதமாக, செல்லுபடியற்றதாக அல்லது அமுலாக்கம் செய்யப்பட முடியாததாக மாறும் பட்சத்தில் எஞ்சியுள்ள விதிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது.

**9.19. சட்ட இணக்கப்பாடு மற்றும் நிதியியல் குற்ற இணக்கப்பாடு**

**9.19.1** வங்கி தொழிற்படுகின்ற அனைத்து சட்டப் பிரிவுகளிலும் சட்டங்களுக்கு (உரிய நிதியியல் குற்ற இணக்கப்பாட்டுச் சட்டங்கள் மற்றும் சட்ட விரோத பணக் கடத்தல், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரானவை தொடர்புபட்ட ஒழுங்கு முறைகள் அடங்கலாக) இணங்கிச் செயற்படுவதில் வங்கி அர்ப்பணிப்புடன் உள்ளது.

**9.19.2** சட்டங்களுக்கு இணங்கி செயற்படும் வங்கியின் ஆற்றல் வங்கியின் வாடிக்கையாளர்களின் நடத்தையுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளது. அத்தகைய சட்டங்களுக்கு வாடிக்கையாளர் இணங்கி செயற்படுவதுடன், வாடிக்கையாளரோ அல்லது வங்கியோ அத்தகைய சட்டங்களை மீறும் வகையில் வாடிக்கையாளர் தனது வியாபாரச் செயற்பாட்டை முன்னெடுத்தல் ஆகாது.

**9.19.3** வாடிக்கையாளருக்கு வங்கியால் வழங்கப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகள் அல்லது இந்தக் கூற்றில் இடம்பெற்றுள்ள விடயம் தொடர்பில் உரிய எந்தவொரு சட்டத்தையும் எவ்விதமாகவும் மீறுதல் தொடர்பில் வாடிக்கையாளர் அல்லது அதன் துணை நிறுவனங்களுக்கு எதிராக எவ்விதமான மீறல் அல்லது

எவ்விதமான நடவடிக்கை, விசாரணை அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பில் வாடிக்கையாளர் அறியப்பெறும் சமயத்தில் வாடிக்கையாளர் அது தொடர்பில் முறையாக வங்கிக்கு அறியத் தருதல் வேண்டும் (அவ்வாறு அறியப்படுத்த வேண்டாம் என சட்டரீதியாக தடை செய்யப்பட்டாலன்றி)

**9.20. மேலிட ஒப்புதல்கள்**

**9.20.1** தனது வியாபாரத்திற்கு உரிய மேலிட ஒப்புதல் சட்டங்களை ("மேலிட ஒப்புதல்கள்" ) மதித்து நடக்கும் கடப்பாட்டை வங்கி கொண்டுள்ளது. மேலிட ஒப்புதலை மீறும் எவ்விதமான செயற்பாடும் வங்கியின் நன்மதிப்பு, உரிமை, ஒழுங்குமுறை உறவுகள் மீது பாரதூரமான பாதிப்பினை ஏற்படுத்துவதுடன், உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் தனது வாடிக்கையாளர்களுடன் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடும் வங்கியின் திறனைப் பாதிக்கலாம்.

**9.20.2** மேலிட ஒப்புதல்களுக்கு இணங்கி நடப்பதில் வங்கியின் ஆற்றல் அதன் வாடிக்கையாளர்களின் நடத்தையுடன் நேரடியாக தொடர்பு பட்டுள்ளதால், வாடிக்கையாளர் பின்வருவனவற்றை உறுதி செய்தல் வேண்டும் (i) வாடிக்கையாளர் அல்லது அதன் துணை நிறுவனங்கள் இலக்குகளோ அல்லது மேலிட ஒப்புதல் தொடர்பான விடயமோ அல்லது/மற்றும் (ii) இலக்கு அல்லது மேலிட ஒப்புதல் விடயம் தொடர்புபட்ட எந்தவொரு நபரின் அனுகூலத்திற்காக அல்லது வாடிக்கையாளர் அல்லது அதன் துணை நிறுவனங்கள் அல்லது எந்தவொரு வங்கி அங்கத்தவர் எந்தவொரு உரிய மேலிட ஒப்புதலை மீறும் அல்லது இலக்கு அல்லது மேலிட ஒப்புதல் விடயமாக மாறுமிடத்தில் வங்கி அங்கத்தவரை ஈடுபடுத்தி எவ்விதமான உற்பத்தி, சேவை அல்லது கொடுக்கல்வாங்கலை (அல்லது அதன் மூலமான விற்பனையை) மேற்கொள்ளல் ஆகாது. வங்கியின் மேலிட ஒப்புதல் கொள்கையை வங்கி மீற வேண்டிய எந்தவொரு உற்பத்தி அல்லது சேவை அல்லது எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடைமுறையையும் முன்னெடுக்காது விடும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

## 10. கார்கில்ஸ் வங்கிக்கு அதிகாரமளித்தல்

கணக்கிலுள்ள (கணக்கிலுள்ள) வங்கிச்சேவை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை அடையப் பெறுவது வர்த்தக இணைய வங்கிச்சேவை பாவனையாளர் அடையாளச்சொல் மற்றும் வாடிக்கையாளர் கடவுச்சொல் அடங்கலாக எந்தவொரு வழியிலும் பாவனையாளரை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையை கார்கில்ஸ் வங்கி மேற்கொண்ட பின்னரே வர்த்தக இணைய வங்கிச்சேவையினூடாக அனுமதிக்கப்படும். பாவனையாளர் வழங்கும்

அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை கார்கில்ஸ் வங்கிக்கு வழங்குவதை வாடிக்கையாளர் இதன் மூலமாக வெளிப்படுத்துகின்றார். வர்த்தக இணைய வங்கிச் சேவை பாவனையாளர் அடையாளச் சொல் மற்றும் வாடிக்கையாளர்/பாவனையாளர் கடவுச்சொல் ஆகியவற்றை சரிபார்ப்பது தவிர, வர்த்தக இணைய வங்சிச்சேவையினூடாக வாடிக்கையாளர் அனுப்பி வைத்துள்ளதாக தோன்றுகின்ற அல்லது பாவனையாளர் மற்றும்/அல்லது வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற அல்லது கிடைக்கப்பெற்றதாக தோன்றுகின்ற எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையை/அறிவுறுத்தலை சரிபார்க்கும் எவ்விதமான கடப்பாடும் கார்கில்ஸ் வங்கிக்கு கிடையாது.

வர்த்தக இணைய வங்கிச் சேவையை தொழிற்படும் சமயத்தில் பாவனையாளர் வழங்கும் முகத்திரை அல்லது அச்சிடப்பட்ட வெளியீட்டு வடிவமானது இணையத்தை அடைந்துள்ளமைக்கான தொழிற்பாட்டு ஆவணமாக உள்ளதுடன், இது குறித்த கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கான கார்கில்ஸ் வங்கியின் ஆவணமாக கருதப்பட முடியாது. கார்கில்ஸ் வங்கியின் சொந்த ஆவணங்கள் கணினி கட்டமைப்புக்கள் ஊடாக பேணிப் பாதுகாக்கப்படுகின்றன அல்லது அனைத்து நோக்கங்களுக்கும் அறுதியும், இறுதியுமான முடிவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

## 11. தகவலின் துல்லியத்தன்மை

வர்த்தக இணைய வங்கிச்சேவை பாவனை மூலமாக அல்லது இலத்திரனியல் அஞ்சல் அல்லது எழுத்து மூலமான தொடர்பாடல் போன்ற ஏனைய வழிமுறைகளால் கார்கில்ஸ் வங்கிக்கு வழங்கப்படுகின்ற தகவல் விபரங்களின் துல்லியத்திற்கு வாடிக்கையாளரே பொறுப்பு. வாடிக்கையாளரால் அல்லது பாவனையாளரால் வழங்கப்படுகின்ற தவறான தகவல் விபரங்கள் காரணமாக ஏற்படுகின்ற விளைவுகளுக்கு கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக் கொள்ளாது.

தான் கார்கில்ஸ் வங்கிக்கு வழங்கியுள்ள தகவல் விபரத்தில் தவறு உள்ளதாக வாடிக்கையாளர் சந்தேகித்தால், முடிந்தளவு விரைவாக அது தொடர்பில் கார்கில்ஸ் வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும். 'தன்னாலான மிகச் சிறந்த முயற்சிகளின்' அடிப்படையில் முடிந்த வரை விரைவாக தவறை சரிசெய்யும் முயற்சியை கார்கில்ஸ் வங்கி முன்னெடுக்கும். கணக்கு விபரத்திலுள்ள தவறு தொடர்பாக வர்த்தக இணைய வங்கிச்சேவை அல்லது வேறு எந்தவொரு இணைய வங்கிச்சேவைகளினூடாக வாடிக்கையாளர் அறியத்தரும் பட்சத்தில், அது தொடர்பில் கார்கில்ஸ் வங்கியிடம் முடிந்தளவு விரைவாக அறிவித்தல் வேண்டும். அத்தவறை முறையாக சரி செய்யும் முயற்சியை கார்கில்ஸ் வங்கி மேற்கொள்ளும்.

## 12. சட்ட ஆட்சி மற்றும் அதிகார எல்லை

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விதிகள் அனைத்தும் இலங்கை சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்டதுடன், அதற்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

11.1 இணையச் சேவைகள் தொடர்பாக எழுகின்ற எந்தவொரு பிணக்கு, சர்ச்சை அல்லது இழப்பீட்டு கோரல்கள் அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான மீறல், முடிவுறுத்தல் அல்லது செல்லுபடியற்றதாகுதல் ஆகியன 1995 ஆம் ஆண்டு இலங்கை மத்தியஸ்த சட்ட இலக்கம் 11 இன் விதிகளுக்கு அமைவாக மத்தியஸ்த தீர்வு காணப்படும்.

11.2 வாடிக்கையாளருக்கும் கார்கில்ஸ் வங்கிக்கும் இடையில் அல்லது வாடிக்கையாளருக்கும் இங்குள்ள எந்தவொரு விடயம் தொடர்பாகவும் பிணக்குகள் ஏதேனும் எழுகின்ற பட்சத்தில், இரு தரப்பும் (வங்கி மற்றும் வாடிக்கையாளர்) தலா மத்தியஸ்தர் ஒருவரை நியமிப்பதுடன், இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள மத்தியஸ்தர்கள் மூன்றாவது மத்தியஸ்தர் ஒருவரை நியமிப்பர்.

11.3 மத்தியஸ்தம் வகிக்கும் இடம் கொழும்பாக அமைவதுடன், தரப்புக்களுக்கு இடையில் வழங்கப்படும் தீர்ப்பு இறுதியானதாகவும் கடப்பாடு மிக்கதாகவும் அமையும்.

11.4 மத்தியஸ்த வழக்குகள் 1995 ஆம் ஆண்டு மத்தியஸ்த சட்ட இலக்கம் 11 இன் விதிமுறைகளுக்கு அமைவாக ஆங்கில மொழியில் நடாத்தப்படுவதுடன், தீர்ப்பு அல்லது தீர்ப்புக்கள் ஆங்கில மொழியிலேயே வழங்கப்படும்.

11.5 மத்தியஸ்தர் வழங்கும் தீர்ப்பு இறுதியானதும், அறுதியானதும் என கருதப்படுவதுடன் அதனை ஏற்றுக்கொள்ளும் கடப்பாடு இரு தரப்பினருக்கும் உண்டு. இத்தீர்ப்பினை அமுல்படுத்துவதற்காக உயர் நீதிமன்றில் விண்ணப்பிக்கும் உரிமை இரு தரப்பினருக்கும் உண்டு.

## 13. வெளிநாட்டு சட்ட அதிகாரம்

கார்கில்ஸ் வங்கி வர்த்தக இணைய வங்கிச்சேவையானது இலங்கையின் சட்டங்களுக்கு உட்பட்டது. இந்த இணையத்தளத்தை இலங்கைக்கு வெளியிலுள்ள ஒருவராலும் இயக்க முடியும் என்ற ஒரு தரவை மட்டும் வைத்துக் கொண்டு இங்குள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலும் இணைய சேவைகள் தொடர்பிலும் குறிப்பிட்ட அந்த நாட்டின் சட்ட அதிகாரத்திற்கு உட்பட்டது என்று அர்த்தப்படாது.

வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு இந்த இணைய சேவைகள் கிடைக்கப்பெறாது என்பதுடன், முற்கூட்டிய ஒழுக்காற்று இணக்கப்பாடின்றி வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு இணைய சேவைகளை வழங்க முடியாது. இணைய சேவைகளை சட்டரீதியாக பெற்றுக்கொள்ள முடியுமா மற்றும்/அல்லது தமது சட்ட அதிகார எல்லைகளின் கீழ் உபயோகிக்க முடியுமா என்பதை சரிபார்க்க வேண்டியது வெளிநாட்டில் வசிப்பவர்களின் முற்றுமுழுதான பொறுப்பாகும். எந்தவொரு சட்ட அதிகாரத்திற்கும் எந்தவொரு நபருக்கும் எந்தவொரு சேவையையும் வாங்குவதற்கான வாய்ப்பை விற்க அல்லது வழங்குவதற்கான வாய்ப்பை இணைய சேவைகள் வழங்குவதில்லை, அத்தகைய சலுகையை வழங்குவது அல்லது பரிந்துரைப்பது சட்டவிரோதமானது.

## 14. அந்தரங்கம் பேணும் கொள்கை

இந்த இணையத்தளத்தை உபயோகிக்கும் நடைமுறையின் போது இரகசியத் தன்மை கொண்ட தகவல் விபரங்கள் அடங்கலாக வாடிக்கையாளர் தொடர்பான தகவல் விபரங்களை கார்கில்ஸ் வங்கி அறிந்துகொள்ளக்கூடும். தனது வாடிக்கையாளர்களின் அந்தரங்கத்தைப் பேணுவதில் கார்கில்ஸ் வங்கி வலுவான அர்ப்பணிப்பு கொண்டுள்ளதுடன், தன்னிடம் வழங்கப்பட்டுள்ள தகவல் விபரங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை முன்னெடுத்துள்ளது. இணைய சேவையின் கீழ் தகவலின் அந்தரங்கம் மற்றும் அவை பரிமாற்றம் செய்யப்படுவதை பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து வழிமுறைகளையும் கார்கில்ஸ் வங்கி முன்னெடுத்துள்ளதுடன், கார்கில்ஸ் வங்கியின் தரப்பில் மொத்த அலட்சியம் இடம்பெற்றுள்ளதாக நிரூபிக்கப்பட்டாலன்றி, அந்தரங்க தகவல் விபரத்தை வெளிப்படுத்துவதற்கு எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக் கொள்ளாது.

இணையத்தளத்தினூடாக இணைய சேவைகளை வழங்கும் போது பெற்றுக்கொள்ளப்படுகின்ற அந்தரங்க தன்மை கொண்ட கார்கில்ஸ் வங்கி தொடர்பான தகவல் விபரங்களை எந்த வகையிலும் வேறு எந்தவொரு நபருக்கும் வாடிக்கையாளர் வெளிப்படுத்தக்கூடாது. இந்த கடமையை நிலைநாட்டத் தவறும் பட்சத்தில், இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பாரதூரமாக மீறியுள்ளதாக கருதப்பட்டு, வாடிக்கையாளருக்கு எதிராக எவ்விதமான இழப்பீடுகளும் அன்றி இணைய சேவைகளை இரத்துச் செய்யும் உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளது.

பின்வரும் தேவைப்பாடுகள் எழும் போது நல் நோக்குடன் செயற்பட வேண்டி ஏற்பட்டாலன்றி, வாடிக்கையாளரால் வழங்கப்படுகின்ற தகவல் விபரங்களை வேறு

எந்தவொரு நபருக்கு வெளிப்படுத்த மாட்டேன் என்ற பொறுப்பை கார்கில்ஸ் வங்கி ஏற்றுக்கொள்கின்றது:

I. சட்டரீதியான தேவைப்பாடுகளை உறுதி செய்தல் அல்லது சட்ட நடைமுறைக்கு இணங்குதல்,

II. கார்கில்ஸ் வங்கியின் உரிமைகள் அல்லது உடமையைப் பாதுகாத்து பேணுதல்,

III. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அமுலாக்கம் செய்தல்; அல்லது

IV. கார்கில்ஸ் வங்கியின் அங்கத்தவர்கள் மற்றும் ஏனையோரின் நலன்களை பாதுகாப்பதற்காக செயற்படுதல்.

சட்டத்தின் தேவைப்பாடு அல்லது சம்பிரதாய நடைமுறைக்கு அமைவாக வங்கிகள்/நிதி நிறுவனங்கள்/கடன் பணியகங்கள்/முகவர்கள்/எந்தவொரு தொலைதொடர்பாடல் அல்லது இலத்திரனியல் அகற்றல் வலையமைப்புக்களிடம் வாடிக்கையாளரின் விபரங்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் விபரங்கள் தொடர்பான அனைத்து தகவல் விபரங்களையும் பரிமாறும், பகிர்ந்து கொள்ளும் அல்லது அங்கம் வகிக்கும் அதிகாரத்தை வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கிக்கு வழங்குவதுடன், இந்த தகவல் விபரங்களை பயன்படுத்துதல் அல்லது வெளிப்படுத்தலுக்கு கார்கில்ஸ் வங்கியை பொறுப்பாளியாக்க முடியாது.

## 15. தரப்புக்களுக்கு இடையிலான உறவுமுறை

இணைய சேவைகளைப் பெற்றுக்கொள்வதாலோ அல்லது இந்த இணையத்தளத்தை உபயோகிப்பதாலோ தமக்கிடையில் எவ்விதமான கூட்டு வியாபாரம், பங்குடமை, தொழில்வாய்ப்பு அல்லது முகவர் உறவுமுறை கிடையாது என்பதை இரு தரப்பும் ஏற்றுக்கொள்கின்றது. அனைத்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளும் பிரதானிகள் என்ற அடிப்படையில் வாடிக்கையாளரால் முன்னெடுக்கப்படுவதுடன், கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது அதனால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இரு தரப்புக்களுக்கும் இடையில் ஏற்கனவே உறவுமுறை உள்ளது என வாடிக்கையாளர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற கடப்பாடு கிடையாது.

## 16. வாடிக்கையாளரின் பிரதிநிதித்துவம்

வாடிக்கையாளர் பின்வருவன தொடர்பில் தான் பிரதிநிதித்துவம் செய்வதாக கார்கில்ஸ் வங்கிக்கு ஒப்புதல் அளிக்கின்றார் (கொடுக்கல்வாங்கல் இடம்பெறும் ஒவ்வொரு திகதியிலும் இந்த பிரதிநிதித்துவம் வாடிக்கையாளரால் தொடர்ந்தும் ஒப்புவிக்கப்படுவதாக கருதப்படும்):-

16.1 இதன் கீழான தனது கடப்பாடுகள் அனைத்தையும் முன்னெடுக்கும் அதிகாரத்தை வாடிக்கையாளர்/பாவனையாளர் கொண்டுள்ளதாகவும், அத்தகைய நடவடிக்கையை நிறைவேற்றல், வழங்குதல் அல்லது செயற்படுதல் ஆகியவற்றை அங்கீகரிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாகவும்

16.2 தேவைப்படுகின்றவாறு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அனைத்து உள்ளக அங்கீகார அனுமதிகளுக்கும் இணங்கி நடப்பது வாடிக்கையாளரின்/பாவனையாளரின் முழுமையான பொறுப்பாகும்.

16.3 இணைய சேவைகளை பெற்றுக்கொள்வது மற்றும் இதன் கீழ் எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையையும் முன்னெடுத்து நிறைவேற்றுவது, வழங்குவது மற்றும் செயற்படுவது உரிய எந்தவொரு சட்டங்களையும் மற்றும்/அல்லது எந்தவொரு ஒழுக்காற்று தேவைப்பாடுகளையும் (இலங்கை மத்திய வங்கி, நாணய மாற்று கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் உள்ளிட்ட அனைத்து வழிகாட்டல் விதிமுறைகள்), அதன் கொள்கை கட்டமைப்பு ஆவணங்களின் எந்தவொரு விதி, எந்தவொரு நீதிமன்ற தீர்ப்பு அல்லது அல்லது ஏனைய அரசாங்க ஸ்தாபனங்கள் அல்லது அதன் எந்தவொரு சொத்துக்கள் அல்லது அதனை அல்லது அதன் சொத்துக்களை பாதிக்கும் வகையில் ஒப்பந்தரீதியாக எந்தவொரு கட்டுப்பாட்டையும் மீறாததாக அல்லது பிணக்குடையதாக அமையக்கூடாது.

16.4 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிரான அல்லது அதன் கடப்பாடுகளை முன்னெடுக்கும் திறனுக்கு எதிரான சட்டபூர்வம், செல்லுபடி அல்லது நடைமுறைப்படுத்தலைப் பாதிக்க வாய்ப்புள்ள வகையில் சட்டத்தின் எந்தவொரு செயற்பாடு, வழக்கு அல்லது நடவடிக்கை அல்லது எந்தவொரு நீதிமன்றம், நியாய சபை, அரசாங்க ஸ்தாபனம், முகவர் அல்லது உத்தியோகத்தர் அல்லது எந்தவொரு மத்தியஸ்தர் தொடர்பில் நிலுவையில் உள்ளதாகவோ அல்லது அதன் அறிவுக்கு எட்டியவரை வாடிக்கையாளருக்கு எதிராக அச்சுறுத்துவதாகவோ அமையக்கூடாது மற்றும்

16.5 வாடிக்கையாளரால் அல்லது அவரின் சார்பில் எழுத்து மூலமாக கார்கில்ஸ் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து தகவல் விபரங்களும் வழங்கப்பட்ட திகதியில் உள்ளவாறு அனைத்து விடயங்களின் சார்பிலும் உண்மையாகவும், துல்லியமாகவும் மற்றும் பூரணமானதாகவும் அமைதல் வேண்டும்.

16.6 எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையையும் வாடிக்கையாளர் நிறைவேற்றுவதைக் கட்டுப்படுத்துகின்ற அல்லது தடை செய்கின்ற வகையில் ஒழுக்காற்று தேவைப்பாடுகளில் ஏற்படும் எந்தவிதமான மாற்றத்தையும் வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கியிடம் தெரியப்படுத்தல் வேண்டும்.

## 17. நிகழ்வுகளை முடிவுறுத்தல்

இணைய சேவையை வழங்குவதை நிறுத்துவது தொடர்பான அறிவித்தல் குறைந்தபட்சம் ஒரு (1) மாத கால அவகாச எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். இரு தரப்பிற்கும் இடையில் இடம்பெற்று நிலுவையாகவுள்ள அனைத்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளும் முற்றுப்பெற்று முடிவுறுத்தப்படுவதற்கு இணைய வங்கி சேவையின் நிறுத்தம் எவ்விதத்திலும் தொடர்பற்றது. நிறுத்தம் செய்யப்படும் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை தொடர்பான அனைத்து கட்டணங்கள் மற்றும் ஏனைய தொகைகளை பெற்றுக்கொள்ளும் உரிமை கார்கில்ஸ் வங்கிக்கு உண்டு. இச்சேவையை நிறுத்துவதால் வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டியுள்ள ஏதாவது தொகை இருக்கும் பட்சத்தில் வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய தொகையை அதிலிருந்து கழித்துக் கொள்ளும் உரிமைய கார்கில்ஸ் வங்கிக்கு உள்ளது.

இங்கு வழங்கப்படுகின்ற இணைய சேவைகளை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்வதை எவ்விதமான காரணத்தையும் குறிப்பிடாது, எந்நேரமும் தடங்கல் செய்யும், இடைநிறுத்தம் செய்யும் அல்லது இரத்துச் செய்யும் உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளது. எவ்விதமான காரணத்தையும் குறிப்பிடாது இது தொடர்பில் வாடிக்கையாளருக்கு முறையாக அறியத்தருவதற்கு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் கார்கில்ஸ் வங்கி மேற்கொள்வதுடன், வாடிக்கையாளருக்கு எந்த வழியிலும் ஏற்படும் எந்தவொரு இழப்பு/சேதம்/செலவுகளுக்கு அது பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டாது.

பின்வரும் எந்தவொரு நிகழ்வுகளும் வாடிக்கையாளர் தரப்பில் எந்நேரத்திலும் நிகழும் பட்சத்தில் அது விதிமுறைகளைப் பின்பற்றத் தவறியுள்ளமையாக கருதப்பட்டு, இணைய சேவைகள் இரத்துச் செய்யப்படலாம்:-

I. இங்கே தரப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் எந்தவொரு கடப்பாட்டையும் வாடிக்கையாளர் கீழ்ப்பணியவோ அல்லது செயற்படவோ தவறுதல் மற்றும் அவ்வாறு தவறியுள்ளமை தொடர்பில் வாடிக்கையாளருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு முப்பதாவது தினத்தன்று அல்லது அதற்கு முன்பதாக உரிய தீர்வை முன்வைக்க தவறுதல்;

II. வாடிக்கையாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தோன்றுகின்ற பிரதிநிதித்துவம் அது மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தோன்றுகின்ற எந்தவொரு விடயத்திலும் தவறானது அல்லது தவறாக வழிநடாத்துவது என நிரூபிக்கப்பட்டால்;

III. "கூடுதல் இரத்துச் செய்யும் நிகழ்வு"

சந்தர்ப்பத்தின் போது; வாடிக்கையாளர்:-

a) முடிவுறுத்தல், உத்தியோகபூர்வ முகாமைத்துவம் அல்லது கடனறு நிலை (ஒன்றுசேர்ப்பு, கூட்டிணைப்பு அல்லது ஒருங்கிணைப்பு) தொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால்.

b) திவாலாக மாறுதல் அல்லது கடனை செலுத்த இயலாது போதல் அல்லது கடனை செலுத்த வேண்டிய போது பொதுவாக அதனை செலுத்த தவறுதல் அல்லது இயலாமல் உள்ளதாக எழுத்து மூலமாக ஒப்புக்கொள்ளல்.

c) தனது கடன்கொடுனர்களின் நலனுக்காக பொது நியமிப்பு, ஏற்பாடு அல்லது கட்டமைப்பினை ஏற்படுத்தல்.

d) கடனறு நிலை அல்லது திவாலாதல் சட்டம் அல்லது கடன்கொடுனர்களின் உரிமைகளைப் பாதிக்கும் அதையொத்த சட்டத்தின் கீழ் கடனறு நிலை அல்லது திவால் அல்லது வேறு எந்தவொரு நிவாரணத்தையும் நாடும் தீர்ப்பு தொடர்பான வழக்கினை நடைமுறைப்படுத்துவது அல்லது அதற்கு எதிராக நடைமுறையை மேற்கொள்வது அல்லது முடிவுறுத்தல் அல்லது கடனறு நிலை தொடர்பில் மனு சமர்ப்பிக்கப்படல், மற்றும், அதற்கு எதிராக அத்தகைய வழக்கு அல்லது மனு தாக்கல் செய்யப்பட்டால் அல்லது முன்வைக்கப்பட்டால் அத்தகைய வழக்குகள் அல்லது மனு

- திவால் அல்லது கடனறு நிலையின் போது வழக்கு தீர்ப்பின் பெறுபேறுகள் அல்லது நிவாரணக் கட்டளை ஒன்றின் வரவு அல்லது முடிவுறுத்தல் அல்லது கடனறு நிலை தொடர்பில் கட்டளை ஒன்றைப் பிறப்பித்தல் அல்லது
- அது தொடர்பான வழக்கு அல்லது முன்வைப்பு கிடைக்கப்பெற்று 30 தினங்களுக்குள் அது தள்ளுபடி செய்யப்படா விட்டால், வெளியேற்றப்படா விட்டால், தங்கியிருப்பின் அல்லது கட்டுப்படுத்தப்படா விட்டால்;

e) தனது அனைத்து கணிசமான சொத்துக்கள் தொடர்பில் நிர்வாகி, தற்காலிக முடிவுறுத்தல் அலுவலர், தேவையான நடவடிக்கையை முன்னெடுப்பவர், பெற்றுக்கொள்பவர், தர்மகர்த்தா, பாதுகாவலர் அல்லது ஏனைய அத்தகைய அதிகாரியை நாடுதல் அல்லது நியமித்தல்;

f) அதன் சொத்துக்கள் முழுவதையும் அல்லது கணிசமான அளவை பாதுகாத்துக் கொள்வதற்கு தரப்பொன்றைக் கொண்டிருத்தல் அல்லது அனைத்து அல்லது கணிசமான சொத்துக்களுக்கு மற்றும் அத்தகைய தரப்பு கொண்டுள்ள அத்தகைய சொத்துக்களுக்கு எதிராக அபாய, நிறைவேற்ற, இணைப்பு, வரிசைப்படுத்தல் அல்லது எந்தவொரு சட்ட நடவடிக்கையையும் விதிக்கப்பட்டுள்ள, அமுல்படுத்தப்பட்டுள்ள அல்லது வழக்கு தொடரப்பட்ட வகையில் கொண்டிருத்தல் அல்லதுஅத்தகைய எந்தவொரு நடவடிக்கையும் அதன் பின்னர் 30 தினங்களுக்குள் தள்ளுபடி செய்யப்படாதிருத்தல், வெளியேற்றப்படாதிருத்தல், தங்கியிருந்தல் அல்லது கட்டுப்படுத்தப்படாது விடல்;

g) உரிய எந்தவொரு சட்ட ஆட்சி அதிகாரத்தின் கீழும் விளைவித்தல் அல்லது சரத்துக்கள் (a) முதல் (f) வரை (உள்ளடங்கலாக) குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளுடன் இணைந்தாக இருத்தல்;

**h)** எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வது, அல்லது மேற்குறிப்பிட்ட எந்தவொரு நடவடிக்கைக்கும் அதன் ஒப்புதலை வழங்குவது, அங்கீகரிப்பது அல்லது ஏற்றுக்கொள்வது.

## 18. பொறுப்பின் எல்லை வரம்பு

வழங்கப்படுகின்ற இணைய சேவை தொடர்பில், பின்வரும் எந்தவொரு துல்லியமின்மை, தவறு அல்லது தாமதம் அல்லது விடுபாட்டிற்கு கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக் கொள்ளாது:

I. எந்தவொரு தரவு, தகவல் அல்லது செய்தி, அல்லது

II. பின்வரும் காரணங்களால் அத்தகைய தரவு, தகவல் அல்லது செய்தியின் பரிமாற்றம் அல்லது வழங்கல் அல்லது ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதம்

a) அத்தகைய எந்தவொரு துல்லியமின்மை, தவறு, தாமதம் அல்லது விடுபடல் அல்லது

b) இயங்காதிருத்தல் அல்லது

c) அத்தகைய எந்தவொரு தரவு, தகவல் அல்லது செய்தியில் தடங்கல், அல்லது “எதிர்பாராத சூழ்நிலைகள்” (உ-ம். வெள்ளப்பெருக்கு, மோசமான காலநிலை, பூமியதிர்ச்சி அல்லது ஏனைய இறைவனின் செயல், தீ விபத்து, யுத்தம், கிளர்ச்சி, கலவரம், தொழிலாளர் பிணக்கு, விபத்து, அரசாங்க செயற்பாடு, தொடர்பாடல்கள், மின் தடை, உபகரணம் அல்லது மென்பொருள் செயலிழப்பு போன்றவை) காரணமாக வேண்டப்படும் விதத்தில் கணக்குகளை அடையப் பெற முடியாமலிருத்தல் அல்லது கார்கில்ஸ் வங்கியின் நியாயமான கட்டுப்பாட்டை மீறிய வேறு எந்தவொரு காரணம்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் எழுத்து மூலமாக, நேரடியாக கையில் ஒப்படைக்கப்பட்டு அல்லது பதிவுத் தபால் மூலமாக அல்லது தொலைநகல் மூலமாக அல்லது வர்த்தக இணைய வங்கிச்சேவையினூடாக ‘இணைய செய்தி’ ஒன்றின் மூலமாக வாடிக்கையாளர் உடனடியாக கார்கில்ஸ் வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

a) வாடிக்கையாளரின் பாவனையாளர் அடையாளச் சொல் அல்லது கடவுச்சொல் தொலைந்து போதல், களவு போதல் அல்லது அனுமதியற்று உபயோகிக்கப்படுதல் தொடர்பில் வாடிக்கையாளர் அறிந்து கொள்கின்றமை அல்லது

b) எந்தவொரு கட்டளையும் பெறப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு கார்கில்ஸ் வங்கியிடமிருந்து செய்தியொன்றைப் பெற்றுக்கொள்ள வாடிக்கையாளர் தவறுதல் அல்லது

c) ஒரு விடயம் நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில் துல்லியமாக எழுத்து மூலமான உறுதிப்படுத்தலை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்ளத் தவறுதல்; அல்லது

d) கட்டளை ஒன்று தொடர்பான உறுதிப்படுத்தல் மற்றும்/அல்லது வாடிக்கையாளர் முன்னெடுத்திராத கட்டளை நிறைவேற்றப்பட்டுள்ளதாக வாடிக்கையாளர் உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளல்; அல்லது

e) வாடிக்கையாளரின் கணக்கு மீதிகள் அல்லது கொடுக்கல்வாங்கல் விபரங்களில் துல்லியமற்ற ஏதாவது தகவல் விபரம்

மேற்குறிப்பிட்ட எந்தவொரு நிலைமைகளிலும் வாடிக்கையாளர் அறியப்பெற்றவுடன் அது தொடர்பில் கார்கில்ஸ் வங்கிக்கு உடனடியாக தெரியப்படுத்துவதற்கு வாடிக்கையாளர் தவறும் பட்சத்தில், கார்கில்ஸ் வங்கி அல்லது அதன் அதிகாரிகள், பணிப்பாளர்கள், ஊழியர்கள், முகவர்கள்

வாடிக்கையாளர் எழுப்புகின்ற அல்லது வேறு எந்தவொரு நபரும் கையாளுதல், தவறாக கையாளுதல் அல்லது வேறு எந்தவொரு கட்டளை தொடர்பாகவும் எழுப்புகின்ற இழப்பீட்டுக் கோரல்களுக்கு எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டார்கள். அத்தகைய அறிவிப்பு கிடைக்கப்பெறும் பட்சத்தில் வாடிக்கையாளரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் கார்கில்ஸ் வங்கி உடனடியாக நிறுத்தவோ அல்லது தேவையான நடவடிக்கைகளையோ முன்னெடுப்பதுடன், அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றல் வங்கியிடம் உள்ளது அல்லது வங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது அல்லது பொறுப்பேற்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய அறிவிப்பு வழங்கப்படுவதற்கு முன்பதாக ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதம் வாடிக்கையாளரின் கணக்கில் பற்றுச் செய்யப்படும்.

இணையத்தளத்தை/இணைய சேவைகளை உபயோகிப்பதால்/வழங்குவதால்/தொழிற்படுத்துவதால் எழக்கூடிய எவ்விதமான நேரடி, மறைமுக, தற்செயலான, விசேட அல்லது எவ்விதமான சூழ்நிலையிலும் ஏற்படும் சேதங்கள், அல்லது எவ்விதமான சேதங்கள், தண்டனை அல்லது முன்மாதிரி (வைரஸ், தனிப்பட்ட காயம், அலட்சியம், இலாப இழப்பு, தரவு இழப்பு அல்லது ஏனைய புலனாகா தகவல், வர்த்தக தடங்கல், அந்தரங்கத்தை இழத்தல், அல்லது எவ்விதமான நிதியியல் இழப்பு அல்லது இணையத்தளத்தை/இணைய வங்கிச் சேவைகளை அல்லது இணையத்தளத்தில்/இணைய சேவைகளில் எந்தவொரு இணைப்புக்களை அல்லது வகையறாக்களை உபயோகிக்க முடியாமை அல்லது வழங்கும் சேவைகளில் எந்தவொரு பற்றாக்குறை அல்லது குறைபாடு அல்லது அனுமதியின்றிய பாவனையால் ஏற்படும் விளைவு அல்லது பரிமாற்றங்களில் அல்லது தரவுகளில் மாற்றங்களை செய்தல் அல்லது இணைய சேவைகளின் தடங்கல், இடைநிறுத்தம் அல்லது இரத்துச் செய்யப்படல் அல்லது மென்பொருளை இணைப்பது தொடர்பான அறிவுறுத்தல்களை வாடிக்கையாளர் பின்பற்றத் தவறுகின்றமை அல்லது வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்களை, பணிப்புக்களை, கட்டளைகளை அல்லது ஏனைய தொடர்பாடல்களை கார்கில்ஸ் வங்கியால் பெற்றுக்கொள்ள முடியாமை எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் எவ்விதத்துடன் தொடர்புபட்ட செய்தியையும் பரிமாற்றம் செய்ய முடியாமை அல்லது வாடிக்கையாளரின் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள், அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதில் கார்கில்ஸ் வங்கியின் சார்பில் எழக்கூடிய எந்தவொரு விளைவுகள் அல்லது ஒப்பந்தம், துஷ்பிரயோகம், கண்டிப்பான கடப்பாடு அல்லது வேறு எந்த அடிப்படையிலும் வாடிக்கையாளர் கடவுச்சொல்லால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணத்தில் தங்கியிருப்பதால் ஏற்பட்ட விளைவுகளுக்காக இணைய சேவைகளை தோற்றுவித்து, தயாரித்து, வழங்கி அல்லது நிர்வகிப்பதில் ஈடுபடுகின்ற கார்கில்ஸ் வங்கி, அதன் ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அதன் மூன்றாம் தரப்பு முகவர்கள் எந்த விதத்திலும் பொறுப்பேற்றுக் கொள்ள மாட்டார்கள்.

## 19. இணைய சேவையில் ஏற்படும் தடங்கல்

இங்கு வழங்கப்படுகின்ற இணைய சேவையில் எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் தடங்கல் ஏற்பட்டால், வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கியைத் தொடர்பு கொள்ள முடியும். சேவையில் ஏற்படும் தடங்கல் காரணமாக ஏற்படும் எந்தவொரு விளைவுக்கும் கார்கில்ஸ் வங்கி எவ்வகையிலும் பொறுப்பேற்றுக் கொள்ளாது.

## 20. வாடிக்கையாளரின் பணத்தைப் பெற்றுக்கொள்ளல்

கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளரின் அனைத்து பணங்கள் மற்றும் ஏனைய உடமைகளை தனது சொந்த சொத்துக்களிலிருந்து வேறாக்கி, வேறான ஒரு கணக்கில் வைத்துப் பேணுவதுடன், வாடிக்கையாளரால் அறிவுறுத்தப்பட்டால் அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்டால் அல்லது குறித்த நேரத்தில் அமுலில் உள்ள விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் அல்லது சட்டத்தின் தேவையாக இருந்தால் ஒழிய வேறு எந்தவொரு நோக்கத்திற்கும் அதனை உபயோகித்தல் கூடாது. வாடிக்கையாளரின் நிலையான அல்லது குறிப்பிட்ட முறையான அங்கீகாரத்துடனான கட்டளை, அறிவுறுத்தல், பணிப்பு அல்லது ஆணையின் அடிப்படையிலேயே கணக்கிலிருந்தும், கணக்கிற்கும் பணத்தை மாற்றம் செய்யும் கடமையை கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக் கொள்கின்றது.

## 21. இணைய சேவைகள் மற்றும் இணைய சேவைகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை திருத்தம் செய்யும் உரிமை

இணையத்தளத்தினூடாக கிடைக்கப்பெறும் எந்தவொரு இணைய சேவைகளிலும் ஒட்டுமொத்தமாக அல்லது பகுதியளவில் எதையும் சேர்க்கும், திருத்தம் செய்யும், திருத்தியமைக்கும், இடை நிறுத்தும் அல்லது இரத்துச் செய்யும் உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளதுடன், வாடிக்கையாளருக்கு முறையான அறிவித்தலை வழங்குவதற்கு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுக்கும். எந்தவொரு சேர்க்கும், திருத்தம் செய்யும், திருத்தியமைக்கும், இடை நிறுத்தம் செய்யும் அல்லது இரத்துச் செய்யும் விடயம் தொடர்பில் கார்கில்ஸ் வங்கியால் இணையத்தளத்தில் விடுவிக்கப்படும் அறிவித்தலின் பின்னர் இந்த இணையத்தளத்தின் மூலமாக வாடிக்கையாளர் எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையையும் முன்னெடுக்கும் போது கார்கில்ஸ் வங்கியால் சேர்க்கப்பட்ட, திருத்தம் செய்யப்பட்ட, திருத்தியமைக்கப்பட்ட, இடை நிறுத்தம் செய்யப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட விடயத்தை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டுள்ளதாகவே கருதப்படும். கார்கில்ஸ் வங்கி இணையத்தளம்/இணைய சேவைகள் தொடர்பில் அவ்வப்போது புதிய சேவைகளை

அறிமுகப்படுத்தலாம். புதிய இணைய சேவைகள் கிடைக்கப்பெறுகின்றமை தொடர்பில் அவை அறிமுகமாக்கப்படுகின்ற போது இணையத்தளத்தினூடாக அது தொடர்பில் அறியத்தரப்படும்.

## 22. பயன்பாட்டின் மீதான கட்டுப்பாடு

இணையத்தளத்தின்/இணைய சேவைகளின் பயன்பாடு அது வழங்கப்பட்ட நோக்கத்திற்கு மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதையும், எவ்விதமான சட்டவிரோத நோக்கம் அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஒவ்வாத எவ்வழியிலும் உபயோகிக்க முடியாது என்பதை வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக்கொள்கின்றார். கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் போட்டியிடும் அல்லது கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் நலன்களை விட்டுக்கொடுக்கும் அல்லது தீங்கிளைக்கும் வழியில் இணையத்தளத்தில்/இணைய சேவைகளில் உள்ளடங்கியுள்ள எந்தவொரு தகவல் விபரங்களையும் உபயோகிக்கவோ, பரிமாற்றம் செய்யவோ, வழங்கவோ அல்லது வெளியேற்றவோ மாட்டேன் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். கார்கில்ஸ் வங்கி கணிசமான நேரத்தை, பணத்தை, முயற்சியை செலவிட்டு வழிமுறைகளின் பயன்பாடு மற்றும் தீர்மான தராதரங்களின் அடிப்படையில் பெறுமதிமிக்க புலமைச் சொத்தாக உள்ளதையும், கார்கில்ஸ் வங்கி மற்றும் ஏனையவற்றின் வர்த்தக இரகசியங்களைக் கொண்டிருக்கலாம் என்றும் கார்கில்ஸ் வங்கியாலும் மற்றும் ஏனையவற்றாலும் (குறிப்பிட்ட ஏனைய தகவல் மூலங்கள் அடங்கலாக) இணையத்தளம்/இணைய சேவைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு, தொகுக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்டு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். இணைய சேவைகளின் பாவனையின் போதும் அதன் பின்னரும் கார்கில்ஸ் வங்கி மற்றும் ஏனைய தரப்பினரின் தனியுரிமைகளைப் பாதுகாப்பதையும், கார்கில்ஸ் வங்கி அல்லது அதன் உள்ளடக்க, உபகரண மற்றும் ஏனைய வழங்குனர்களால் விடுக்கப்படும் நியாயபூர்வமான எழுத்து மூலமான கோரிக்கைகளின் பேரில் அவர்களுடைய மற்றும் ஏனையோரின் ஒப்பந்தரீதியான, சட்டரீதியான மற்றும் பொதுவான சட்ட உரிமைகளை இணையத்தளத்தில்/இணைய சேவைகளில் பாதுகாப்பதையும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். எந்தவொரு தரப்பும் இணையத்தளத்தை/இணைய சேவைகளை எவ்விதத்திலும் அனுமதி அங்கீகாரமின்றி உபயோகிப்பது தொடர்பில் அறிந்து கொண்டால் அல்லது எந்தவொரு காப்புரிமை, வர்த்தகச் சின்னம் அல்லது ஏனைய ஒப்பந்தரீதியான, சட்டரீதியான அல்லது பொது சட்ட உரிமைகளின் பிரகாரம் இணையத்தளம்/இணைய சேவைகள் மீறப்படுவதை அறிந்து கொண்டால்

வாடிக்கையாளர் அது தொடர்பில் முறையாக, எழுத்து மூலமாக வங்கிக்கு அறியத்தருவேன் என்பதை ஏற்றுக்கொள்கின்றார்.

இணையத்தளத்திலிருந்து தரவினை தனது கணினித் திரையில் பதிவிறக்கம் செய்து கொள்ள அல்லது மீட்டெடுக்க, தாளில் தனிப்பட்ட பக்கங்களை அச்சிட, புகைப்படப் பிரதி செய்ய மற்றும் அத்தகைய பக்கங்களை இறுவட்டில் இலத்திரனியல் வடிவில் சேமித்துப் பேணுவதற்கு வாடிக்கையாளரின் பிரத்தியேகமான தனிப்பட்ட பாவனைக்கு மாத்திரமே இடமளிக்கப்படுகின்றது. இணையத்தளத்திலுள்ள/இணைய சேவைகளிலுள்ள அனைத்து புலமைச் சொத்துக்களும் வழங்கப்படும் சேவையும் தொடர்ந்தும் கார்கில்ஸ் வங்கியின் சுய சொத்து என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

வாடிக்கையாளர் செய்யக்கூடாதவை:

I. இலங்கையின் சட்டங்களுக்கு அமைவாக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும் வகையில் எந்தவொரு இணைய சேவையையும் எந்தவொரு வழியிலும் தலைகீழாக்குதல், பொறியமைப்புச் செய்தல், தொகுப்பு நீக்கல், பிரித்தெடுத்தல், பிரதி செய்தல், மீள்உற்பத்தி செய்தல், வழங்குதல், திருத்தம் செய்தல், பரிமாற்றம் செய்தல், தொழிற்படுத்துதல், வெளியிடுதல் அல்லது தருவிக்கப்பட்ட படைப்புக்களை உருவாக்குதல்;

II. வாடிக்கையாளரின் கணக்குகள் மற்றும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு எந்தவொரு தகவலையும் அல்லது எந்தவொரு சேவையையும் முழுமையாக அல்லது பகுதியளவில் சேமித்தல் மற்றும் திட்டமிட்டு பதிவிறக்கம் செய்தல் மூலமாக இலத்திரனியல் அல்லது கட்டமைக்கப்பட்ட கையேட்டு வடிவத்தில் தரவுத்தளமொன்றை உருவாக்குதல்;

III. இணையத்தளம் மற்றும் இணைய சேவையை வேறு எந்தவொரு நபரும் அடையப் பெறும் வகையில் வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு விடுதல், விற்பனை செய்தல், துணை உரிமம் அளித்தல் அல்லது இரவலாக கொடுத்தல்;

IV. எந்தவொரு நபருக்கும் இடைமாற்றம் செய்து அல்லது அனுமதியுடன் தகவலை இரகசியமாகப் பெறுவதற்கு அனுமதித்தல்;

V. கார்கில்ஸ் வங்கி அல்லது இணையத்தளத்திலுள்ள எந்தவொரு மூன்றாம் தரப்பு அல்லது அதன் மூலமாக வழங்கப்படுகின்ற இணைய சேவையின் புலமைச் சொத்துக்கள் உரிமையை மீறும் எந்தவொரு செயலையும் முன்னெடுத்தல்;

VI.

வாடிக்கையாளரின் கடவுச்சொல்லை அல்லது இணையத்தளத்திலுள்ள எந்தவொரு பாவனையாளரினதும் எந்தவொரு தனிப்பட்ட தகவல் விபரங்களையும் மோசடியாக பெற்றுக்கொள்ளும் நோக்கம் அல்லது எவ்விதமான செயற்பாடு அடங்கலாக எவ்விதமான மோசடி, துஷ்பிரயோக அல்லது சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடல்;

VII.

எந்தவொரு கணினி வலையமைப்பினதும் பாதுகாப்பை மீறும் வகையில், வேறு எந்த பாவனையாளரினதும் கடவுச்சொல் அல்லது பாதுகாப்பு குறியாக்க குறியீடுகளை தகர்க்க முயற்சிக்கும், அச்சுறுத்தும் மற்றும் ஆபாசமான விடயங்கள் அடங்கலாக சட்டவிரோதமான விடயங்களை பரிமாற்றம் செய்யும் அல்லது தேக்கி வைக்கும் வகையில் வலைத்தளம் அல்லது இணைய சேவைகளை பயன்படுத்தல்;

## 23. தனியுரிமை மற்றும் புலமைச் சொத்துக்கள் உரிமைகள்

இணையத்தளத்தில்/இணைய சேவைகளில் உள்ள காப்புரிமை, வர்த்தகச் சின்னங்கள், இலச்சினைகள், சுலோக வாக்கியங்கள் மற்றும் சேவைக் குறியீடுகள் கார்கில்ஸ் வங்கியின் அல்லது முறையே குறித்த புலமைச் சொத்துக்கள் உரிமையைக் கொண்டுள்ளவர்களின் புலமைச் சொத்துக்கள் உரிமைகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இணையத்தளத்தில்/இணைய சேவைகளில் காண்பிக்கப்பட்டுள்ள கார்கில்ஸ் வங்கி அல்லது அத்ததகைய மூன்றாம் தரப்பினரின் உடமையான புலமைச் சொத்துக்களை எழுத்து மூலமான அனுமதியின்றி இணையத்தளத்தில்/இணைய சேவைகளில் காண்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு புலமைச் சொத்துக்களையும் உபயோகிப்பதற்கு எவ்விதமான அனுமதி அல்லது உரிமை அல்லது வேறு எதுவும் வழங்கப்பட்டுள்ளதாக இணையத்தளத்தை/இணைய சேவைகளை பயன்படுத்துபவர்கள் கருத முடியாது.

கார்கில்ஸ் வங்கிக்கு அதன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு சொந்தமற்ற, எந்தவொரு புலமைச் சொத்துக்கள் உரிமைகளை அல்லது எந்தவொரு மூன்றாம் தரப்பின் உரிமைகளை, அல்லது காப்புரிமைகளை மீறும் வகையில் விடயங்களை பயன்படுத்தி காண்பிப்பதை இணையத்தளத்தை/இணைய சேவைகளை வாடிக்கையாளர் பயன்படுத்தும் போது கார்கில்ஸ் வங்கி அதற்கான உத்தரவாதத்தை வழங்கவில்லை மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

குற்றவியல் வழக்கைத் தொடுத்தல் அடங்கலாக புலமைச்சொத்துக்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு கார்கில்ஸ் வங்கி தீவிரமான முயற்சிகளை எடுக்கும் என்பதை வாடிக்கையாளர் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் வழங்கப்பட்டுள்ள பாவனை தொடர்பான கட்டுப்பாடுகளை மீறுதல் சட்டத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துவதுடன், பாரதூரமான குடிசார் மற்றும் குற்றவியல் தண்டனைகளுக்கு உட்படுத்தப்படலாம். கார்கில்ஸ் வங்கி இங்குள்ள தனது நலனை பாதுகாப்பதற்கு கிடைக்கப்பெறுகின்ற அனைத்து தீர்வுகளுடன், அதற்கும் மேலாக நியாயமான நட்டஈட்டையும் (அனைத்து சேதங்கள், நேரடி, மறைமுக, விளைவாக ஏற்படுகின்ற மற்றும் முன்மாதிரியான அடங்கலாக) பெற்றுக்கொள்ளும் உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளது. இணைய சேவைகளில் கிடைக்கப்பெறுகின்ற மென்பொருள் மற்றும் இச்சேவையை அடையப் பெறுவதற்கு தேவைப்படுகின்ற ஏனைய இணையம் தொடர்பான மென்பொருள் ஆகியன முறையே குறித்த விற்பனையாளர்களின் சட்டரீதியான சொத்து என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். இணைய சேவைகளை அடையப்பெறுவதற்கு கார்கில்ஸ் வங்கியால் வழங்கப்பட்டுள்ள அனுமதி மேற்குறிப்பிட்ட மென்பொருள் தொடர்பான எவ்விதமான காப்புரிமை, பதிப்புரிமை மற்றும் உரிமம், தனியுரிமை அல்லது உரிமையாண்மை உரிமைகள் அல்லது ஏனைய புலமைச் சொத்து உரிமைகளை வழங்குவதாக கருதப்பட முடியாது.

## 24. அசாதாரண நிகழ்வுகள்/தொழில்நுட்ப சிக்கல்கள்

இலங்கை மத்திய வங்கி/அரசாங்க கட்டுப்பாடு, நாணய மாற்று கட்டுப்பாடு அல்லது சந்தை ஒழுங்குமுறை, யுத்தம், வேலைநிறுத்தம், வைரஸ் தாக்குதல், உபகரண செயலிழப்பு, தொடர்பாடல் இணைப்பு செயலிழப்பு, கட்டமைப்பு செயலிழப்பு, இணையத்தில் பாதுகாப்பு செயலிழப்பு, அனுமதியின்றி அடையப் பெறல், களவு, அல்லது எந்தவொரு பிரச்சனை, வாடிக்கையாளர் இச்சேவைகளைப் பெறுவதை தடை செய்யும் வகையில் கார்கில்ஸ் வங்கியின் கட்டுப்பாட்டை மீறிய ஏனைய நிலைமைகள் அல்லது அறிவுறுத்தல், கட்டளை, பணிப்பு ஆகியவற்றை கார்கில்ஸ் வங்கி முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் கார்கில்ஸ் வங்கியின் கட:டுப்பாட்டை மீறிய நிலைமைகள் காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படுகின்ற உண்மையான அல்லது உணரப்படுகின்ற எந்தவொரு இழப்பிற்கும் கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக்கொள்ளாது என்பதுடன், அந்த வேளையில் எவ்விதமான இழப்பீட்டுக் கோரல்களிலிருந்து கார்கில்ஸ் வங்கிக்கு எவ்விதமான தீங்கினையும் ஏற்படுத்த மாட்டேன் என்பதை வாடிக்கையாளர் குறிப்பாக ஏற்றுக்கொள்கின்றார். “இழக்கப்பட்ட வாய்ப்பு’ , நிறைவேற்றப்பட முடியாத கட்டளைகள், அறிவுறுத்தல்கள், பணிப்புக்கள்

மூலமான நியாயமான இலாபங்கள் ஆகியவற்றிற்கும் கார்கில்ஸ் வங்கி எவ்விதமான இழப்பீட்டையும் வழங்காது என்பதையும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

## 25. வலைத்தளங்களுக்கான இணைப்புக்கள்

இந்த இணையத்தளமானது ஏனைய தரப்புக்களால் இயக்கப்படுகின்ற ஏனைய இணையத்தளங்களுடன் இணைப்புக்களைக் கொண்டிருக்கலாம். வாடிக்கையாளரின் சௌகரியத்திற்காக மட்டுமே இத்தகைய இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இத்தகைய இணையத்தளங்கள் கார்கில்ஸ் வங்கியின் கட்டுப்பாட்டில் இல்லை மற்றும் அதனால் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதுடன், அவற்றிலுள்ள விடயங்களுக்கு கார்கில்ஸ் வங்கி பொறுப்பாளி அல்ல. அத்தகைய இணையத்தளங்களின் பாவனை அவற்றில் அடங்கியுள்ள ஏனைய விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக உபயோகிக்கப்பட வேண்டியவை. இந்த இணையத்தளத்திலுள்ள விதிமுறைகளுக்கும், குறிப்பிட்ட ஏனைய இணையத்தளங்களிலுள்ள விதிமுறைகளுக்கும் இடையில் முரண்பாடு ஏதேனும் காணப்பட்டால், வாடிக்கையாளர் உபயோகிக்கின்ற அத்தகைய இணையத்தளத்தின் விதிமுறைகளே பொருத்தமாகும். இணைந்துள்ள இணையத்தளங்கள் கார்கில்ஸ் வங்கியின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதுடன், இணைக்கப்பட்டுள்ள எந்தவொரு இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ள விடயங்கள் அல்லது இணைக்கப்பட்டுள்ள இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஏனைய இணைப்புக்கள் அல்லது அங்கு இடம்பெற்றுள்ள விளம்பரங்கள் அல்லது அவற்றால் வழங்கப்படுகின்ற சேவைகள் அல்லது அத்தகைய இணையத்தளங்களில் இடம்பெறும் எந்தவிதமான மாற்றங்கள் அல்லது புதுப்பித்தல்களுக்கு கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக்கொள்ளாது. இந்த இணையத்தளமானது கார்கில்ஸ் வங்கியால் இயக்கப்படும் இணையத்தளங்கள், இணைய-பக்கங்கள் மற்றும் சேவைகள் (“கார்கில்ஸ் வங்கி தளங்கள்”) ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம் என்பதுடன், கார்கில்ஸ் வங்கி தளம் ஒவ்வொன்றையும் வாடிக்கையாளர் பாவனை செய்கின்ற போது இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அத்தகைய கார்கில்ஸ் வங்கித் தளம் கொண்டிருக்கக்கூடிய ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக அமையும். இங்குள்ள விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் அறிவித்தல்கள் ஆகியன அத்தகைய கார்கில்ஸ் வங்கித் தளத்திலுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் முரண்படுவதாக அமையும் பட்சத்தில், அத்தகைய கார்கில்ஸ் வங்கித் தளத்திலுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளே பொருத்தமாக அமையும்.

## 26. பாவனையாளர்களை மாற்றுவதற்கான நடைமுறை

தற்போது உள்ள பாவனையாளர் ஒருவருக்கான அதிகாரத்தை நீக்கி, அந்த பாவனையாளரின் உள்நுழைவு விபரம்/அங்கீகாரத்தை புதிய பாவனையாளர் ஒருவருக்கு வாடிக்கையாளர் வழங்க முடிவதுடன், அதற்கான தீர்மானம்/ஆணையை கார்கில்ஸ் வங்கியால் வழங்கப்படும் வடிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எனினும் இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தும் தொடர்ந்தும் அமுலில் இருக்கும். அனுமதிக்கப்பட்ட பாவனையாளர் ஒருவர் வாடிக்கையாளரை விட்டு நீங்கும் பட்சத்தில், அந்தப் பாவனையாளரின் நுழைவு அனுமதியை முடக்குவதற்காக வாடிக்கையாளர் உடனடியாக அது தொடர்பில் கார்கில்ஸ் வங்கிக்கு அறியத்தருவதுடன், அதனை கார்கில்ஸ் வங்கி நிறைவேற்றுவதற்கு நியாயமான கால அவகாசம் வழங்க வேண்டும். பாவனையாளரின் நுழைவு அனுமதியை கார்கில்ஸ் வங்கி முடக்கும் வரையில் இடம்பெற்றுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கு வாடிக்கையாளரே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

## 27. பிடித்து வைக்கப்பட்ட வரிக் கழிவு

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் கார்கில்ஸ் வங்கிக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளும் எவ்விதமான கழிவுகளோ, பிடித்து வைக்கப்படும் வரியோ அல்லது வேறு எந்தவொரு வரியின் பேரிலோ எவ்விதமான தொகைக் குறைவுமின்றி செலுத்தப்படல் வேண்டும். அமுலில் உள்ள எந்தவொரு சட்டத்தின் தேவையாக அமையும் பட்சத்தில் மாத்திரமே அவ்வாறு கழிவையே அல்லது பிடித்து வைக்கும் வரியை கழித்துக் கொள்ள முடியும்.

## 28. கணக்கினை மூடுதல்

கார்கில்ஸ் வங்கி மற்றும்/அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் வாடிக்கையாளர் மீது எவ்விதமான ஆட்சேபனைகளையும் கொண்டிராத பட்சத்தில் மாத்திரமே கார்கில்ஸ் வங்கியில் பேணுகின்ற கணக்கினை மூடுகின்ற/தொழிற்பாட்டை முடக்குகின்ற செயற்பாட்டை மேற்கொள்ள முடியும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக் கொள்கின்றார்.

## 29. வழங்கப்பட்டுள்ள உரிமைகள்

இங்கு வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டுள்ள எந்தவொரு உரிமைகள் தவிர்ந்த வேறு எந்தவொரு உரிமையும் தனக்கு கிடையாது என்பதை வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக்கொண்டு, ஒப்புக் கொள்கின்றார்.

## 30. திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள்

இங்குள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின் திருத்தங்களை அல்லது சேர்க்கைகளை மேற்கொண்டு தற்போதுள்ள எந்தவொரு விதிமுறைகள் அல்லது நிபந்தனைகளை மாற்றியமைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அல்லது புதிதாக விதிமுறை அல்லது நிபந்தனையொன்றை சேர்ப்பிக்கும் பூரண உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளதுடன், அத்தகைய வேளையில் திருத்தம் தொடர்பாக இணையத்தளத்தில் அறிவிப்பை வெளியிட்டோ அல்லது வாடிக்கையாளருக்கு எழுத்து மூலமான அறிவித்தலையோ கார்கில்ஸ் வங்கி விடுக்கும். அத்தகைய அறிவிப்புக்களின் பின்னரும் இணைய சேவைகளை தொடர்ந்தும் உபயோகிப்பது அத்தகைய திருத்தங்களை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டதாகவே கருதப்படும்.

## 31. கடப்பாடுகளின் நிலைபேறு

இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அனைத்து தரப்புக்களினதும் கடப்பாடுகள் எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையையும் இரத்துச் செய்தாலும் தொடர்ந்து நிலைபெறும்.

## 32. ஒன்றுசேர்ந்த தீர்வுகள்

இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் வழங்கப்பட்டுள்ள உரிமைகள், அதிகாரங்கள், தீர்வுகள் ஒன்றுசேர்ந்தவை என்பதுடன், சட்டத்தில் இடம்பெற்றுள்ளவாறு எந்தவொரு உரிமைகள், அதிகாரங்கள், தீர்வுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் தொடர்பில் பிரத்தியேகமானவை அல்ல.

## 33. உரிமைகளுக்கு விட்டுக்கொடுப்பு கிடையாது

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான எந்தவொரு உரிமை, அதிகாரம் அல்லது வரப்பிரசாதத்தை நிலைநாட்டத் தவறுதல் அல்லது தாமதம் ஏற்படல் உரிமைகளை விட்டுக்கொடுப்பதாக கருதப்படாது என்பதுடன், எந்தவொரு உரிமை, அதிகாரம் அல்லது வரப்பிரசாதத்தை தனித்து அல்லது பகுதியளவில் நிலைநாட்டுதல் எந்தவொரு உரிமை, அதிகாரம் அல்லது வரப்பிரசாதத்தை நிலைநாட்டுவதை மேலும் முன்னெடுக்க முடியாது என்றோ அல்லது தொடர்ச்சியாக அதனை நிலைநாட்ட முடியாது என்றோ கருதப்படல் ஆகாது.

## 34. கூறாக்கத்தக்கது

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் எந்தவொரு விதியும் அல்லது நிபந்தனையும் எந்தவொரு சட்டம், ஆட்சி, நிர்வாக ஒழுங்கு அல்லது எந்தவொரு நீதிமன்றம், அல்லது ஒழுக்காற்று அல்லது சுய ஒழுக்காற்று முகவர் அல்லது சபை ஆகியவற்றின் சட்டரீதியாக தீர்மானம் காரணமாக செல்லுபடியற்றதாக

அல்லது அமுலாக்கம் செய்யப்பட முடியாததாக மாறினால், அவ்வாறு செல்லுபடியாகாத அல்லது அமுலாக்கம் செய்யப்பட முடியாத விதியுடன் அல்லது நிபந்தனையுடன் தொடர்புபட்டதாக மட்டுமே அது அமையும். எஞ்சியுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் செல்லுபடி எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என்பதுடன், அத்தகைய செல்லுபடியற்ற அல்லது அமுலாக்கம் செய்யப்பட முடியாத விதி அல்லது நிபந்தனை தவிர்ந்த ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட முடியும்.

**35. தலைப்புக்கள்**

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான சரத்துக்களின் தலைப்புக்கள் சௌகரியத்திற்காக மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், உரிய சொற்பதத்தின் அர்த்தத்தை எவ்விதத்திலும் பாதிக்காது.

**36. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் சட்டபூர்வம்**

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கார்கில்ஸ் வங்கி அமுலாக்கம் செய்வது, தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் சட்ட நடைமுறைக்கு அமைவானவை என்பதுடன், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் எதுவும் பாவனையாளர் இந்த இணையத்தளத்தை உபயோகிப்பது தொடர்புபட்ட அல்லது அத்தகைய பாவனைக்காக கார்கில்ஸ் வங்கியால் ஒன்றுதிரட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ள தகவல் விபரங்களை அரசாங்க, நீதிமன்ற அல்லது சட்ட அமுலாக்க தேவைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளுக்கு கார்கில்ஸ் வங்கி உபயோகிக்கின்ற உரிமைக்கு எவ்விதமான குறைவும் கிடையாது.

**37. கைமாற்றம் செய்யும் உரிமையின்மை**

வாடிக்கையாளருக்கு அல்லது அதன் பாவனையாளர்களுக்கு இணைய சேவைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு வசதியும் எந்த சூழ்நிலையின் கீழும் கைமாற்றம் செய்யப்பட முடியாதது.

**38. உத்தரவாதங்களின் பொறுப்புத்துறப்பு**

இணையத்தளத்தை/இணைய சேவைகளை உபயோகிப்பது முற்றிலும் தனது சொந்த ஆபத்தின் பேரில் என்பதை வாடிக்கையாளர் வெளிப்படையாக ஏற்றுக்கொள்கின்றார். இணையத்தளம்/இணைய சேவைகள் "அவ்வாறே" மற்றும் "கிடைக்கப்பெறுகின்றவாறு" ஆகிய அடிப்படையில் வழங்கப்படுகின்றன. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தாலன்றி, வணிகத்திற்கான உத்தரவாதங்கள், குறிப்பிட்ட நோக்கத்திற்கு பொருத்தமான அமைதல், தரவின் துல்லியம் மற்றும் முழுமை மற்றும் இணைய சேவைகளின் மீறல் அல்லாத எந்தவொரு உத்தரவாதங்கள் அடங்கலாக வெளிப்படுத்தப்படும்

அல்லது குறிப்புணர்த்தப்படும் அல்லது சட்டரீதியான எந்தவொரு உத்தரவாதங்களிலிருந்தும் தான் பொறுப்புத் துறப்பதாக கார்கில்ஸ் வங்கி வெளிப்படையாக அறியத்தருகின்றது. இணையத்தளம் மற்றும் இணையத் தள சேவைகள் தடங்கல்களின்றி, குறித்த நேரத்தில், பாதுகாப்பாக அல்லது தவறுகளற்றதாக அமையும் என்பதற்காக எவ்விதமான உத்தரவாதங்களையும் கார்கில்ஸ் வங்கி வழங்கவில்லை என்பதையும், இணையத்தளம் அல்லது இணைய சேவைகளின் பயன்பாடு அல்லது இணைய சேவைகளின் துல்லியம் அல்லது நம்பகத்தன்மை மற்றும் பெறுபேறுகளுக்கும் கார்கில்ஸ் வங்கி உத்தரவாதம் அளிக்காது. இணையத்தளத்தில்/இணைய சேவைகளினூடாக மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைக்கும் கார்கில்ஸ் வங்கி எவ்விதமான உத்தரவாதமும் வழங்காது. வாடிக்கையாளர் இணைய சேவைகளை உபயோகிப்பதன் காரணமாக வாடிக்கையாளரின் கணினி கட்டமைப்பில் ஏற்படக்கூடிய எந்தவொரு வைரஸ் தாக்குதலுக்கும் கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக் கொள்ளாது. இணையத்தள சேவைகளில் வைரஸ் கிடையாது என்ற உத்தரவாதத்தை வாடிக்கையாளருக்கோ அல்லது எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கோ கார்கில்ஸ் வங்கி அளிக்கவில்லை.

## 39. வர்த்தக இணைய வங்கிச்சேவையுடன் கணக்கினை இணைத்துக் கொள்ளல்

வர்த்தக இணைய வங்கிச்சேவை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு இலக்கம் (இலக்கங்கள்) வர்த்தக இணைய வங்கிச்சேவையுடன் தொடர்புபடுத்தப்படும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். எவ்வேளையிலும் வாடிக்கையாளர் ஒருவர் வர்த்தக இணைய வங்கிச்சேவையுடன் இணைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட கணக்குகளைத் தவிர வேறு கணக்குகளை (பழைய அல்லது புதிய) கொண்டிருந்தால் அத்தகைய கணக்குகளை அனைத்திற்கும் இணைப்பினை வழங்குமாறு வாடிக்கையாளர் வங்கியைக் கோர முடிவதுடன், அத்தகைய அனுமதியைப் பெற்றுக்கொள்வதை வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக்கொள்கின்றார்.

பணிப்பாய்ச்சல் படிநிலை விதிகளினுள் இணைய வங்கிச் சேவை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் உள்ளடக்கப்படும் என்பதை வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்து மற்றும் உறுதிப்படுத்துகின்றார். அதாவது, இணைய வங்கிச்சேவை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் பின்வரும் எந்தவொரு வகைப்பிரிவிலும் உள்ளடக்கப்படுகின்றது:

I. தனிப் பாவனையாளர் அனுமதி அங்கீகாரம் (உள்நுழைப்பவர் மற்றும் அங்கீகரிப்பவர் ஒருவரே)

II. இரட்டை பாவனையாளர் அனுமதி அங்கீகாரம் (உள்நுழைப்பவர் மற்றும் அங்கீகரிப்பவர்)

III. மூன்றாவது பாவனையாளர் அனுமதி அங்கீகாரம் (உள்நுழைப்பவர் மற்றும் அங்கீகரிப்பவர்கள் இருவர்)

அனுமதி அங்கீகாரங்கள்: வாடிக்கையாளர் குறிப்பிட்ட வகைப்பிரிவை தெரிவு செய்தாலன்றி, கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் அனைத்தும் குறைந்தபட்ச பணிப்பாய்ச்சல் விதிமுறையுடன் முன்னெடுக்கப்படும்/ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது, இணைய வங்கிச்சேவை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையொன்று மேலே பிரிவு (3) இல் அடங்கினால், வாடிக்கையாளர் அத்தகைய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைக்கு (நடவடிக்கைகளுக்கு) குறைந்தபட்ச பணிப்பாய்ச்சலை தெரிவு செய்திராவிட்டால் மற்றும்/அல்லது குறிப்பிடாது விட்டால் அத்தகைய வகைப் பிரிவில் குறைந்த பட்ச பணிப்பாய்ச்சலுடன் அத்தகைய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படும்/ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது மேலே வகைப்பிரிவு (2) இன் கீழ் இரட்டை பாவனையாளர் அனுமதி அங்கீகாரத்தை பயன்படுத்தி கார்கில்ஸ் வங்கியிடம் வாடிக்கையாளர் வழங்கியுள்ள பாவனையாளர் உரிமைகளின் கீழ் அது முன்னெடுக்கப்படும்.

## 40. முன் காப்பீடு

பின்வரும் சந்தர்ப்பங்களில் இணைய சேவையின் பாவனை தொடர்பில் கார்கில்ஸ் வங்கி, அதன் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்கள், பிரதிநிதிகள், முகவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக இழப்பீட்டுக் கோரல், நடவடிக்கை அல்லது ஏனைய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால் கார்கில்ஸ் வங்கி, அதன் பணிப்பாளர்கள், பிரதிநிதிகள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக எந்தவொரு இழப்பீட்டுக் கோரல், சட்ட நடவடிக்கை, நடவடிக்கை அல்லது ஏனைய சட்ட நடவடிக்கைக்கு தனது செலவில் முன்காப்பீட்டை ஏற்பாடு செய்வதாக வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்:

I. இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளர் மீறுதல்;

II. வாடிக்கையாளர் இணைய சேவைகளில் எவற்றையும் நீக்குதல், சேர்த்தல், உள்நுழைத்தல் அல்லது திருத்தம் செய்தல் அல்லது அனுமதி அங்கீகாரமின்றிய பாவனை

III. இங்குள்ள உள்ளடக்கத்தை தவறாக விளங்கிக் கொள்ளல் அல்லது வழங்கியுள்ள பிரதிநிதித்துவம் அல்லது உத்தரவாதத்தை மீறுதல் அல்லது

IV.

இதன் கீழ் வாடிக்கையாளர் செய்ய வேண்டிய எந்த உடன்படிக்கை அல்லது கடமையை மீறுதல். அத்தகைய எந்தவொரு இழப்பீட்டுக் கோரல், சட்ட நடவடிக்கை மற்றும் நடவடிக்கை அல்லது வழக்கு தொடர்பாக எழுகின்ற எந்தவொரு நியாயபூர்வமான சட்டத்தரணியின் கட்டணங்கள் மற்றும் செலவுகள் அடங்கலாக அனைத்து செலவுகள், இழப்புக்கள் மற்றும் செலவினங்களை கொடுப்பதாக வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

இதன் கீழ் வாடிக்கையாளர் செய்ய வேண்டிய எந்த உடன்படிக்கை அல்லது கடமையை மீறுதல். அத்தகைய எந்தவொரு இழப்பீட்டுக் கோரல், சட்ட நடவடிக்கை மற்றும் நடவடிக்கை அல்லது வழக்கு தொடர்பாக எழுகின்ற எந்தவொரு நியாயபூர்வமான சட்டத்தரணியின் கட்டணங்கள் மற்றும் செலவுகள் அடங்கலாக அனைத்து செலவுகள், இழப்புக்கள் மற்றும் செலவினங்களை கொடுப்பதாக வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். அனைத்து சூழ்நிலைகளிலும் இணையச் சேவை தொடர்பில் மீறல், அலட்சியம் அடங்கலாக அனைத்து நிலைமைகளின் போதும் கார்கில்ஸ் வங்கி மீது விடுக்கப்படும் இழப்பீட்டுக் கோரலில் மொத்த பொறுப்பானது இணைய சேவைக்காக கடந்த பன்னிரண்டு (12) மாதங்களில் வாடிக்கையாளர் செலுத்தியுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைக் கட்டணங்கள்/அறவீடுகளின் தொகைக்கு மட்டுப்படுத்தப்படும் என்பதையும் வாடிக்கையாளர் மேற்கொண்டுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் தொகை இதில் உள்ளடக்கப்படாது என்பதையும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

## 41. தொலைநகல் முன் காப்பீடு

I. வாடிக்கையாளர் தனது சௌகரியத்தின், விருப்பின் பேரில் கடவுச்சொல்லை தொழிற்படுத்தல், பாவனையாளர் அடையாளச் சொல்லை இயக்குதல், கடவுச்சொல்லை மீளமைத்தல், கடவுச்சொல்லின் மீள்விநியோகம், மின்னஞ்சல் முகவரி புதுப்பித்தல், மொபைல் இலக்கம் புதுப்பித்தல், ஆகியவற்றிற்கு வர்த்தக இணைய வங்கிச்சேவை சரத்துக்களில் குறிப்பிடப்பட்டவாறு கார்கில்ஸ் வங்கிக்கு தொலைநகல் பரிவர்த்தனை மூலமாக கோரிக்கைகளை/அறிவுறுத்தல்களை விடுப்பதுடன், அத்தகைய நடைமுறையை ஏற்றுக்கொள்ளுமாறு கார்கில்ஸ் வங்கியைக் கோரி, கார்கில்ஸ் வங்கியின் சார்பில் முன்காப்பீட்டை உறுதிப்படுத்தும் எனது/எமது பொறுப்பை வெளிப்படுத்துவதால் கார்கில்ஸ் வங்கி அவற்றை ஏற்றுக்கொள்கின்றது.

II. வாடிக்கையாளர் பின்வருவனவற்றை ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்து, உறுதிப்படுத்தி மற்றும் பொறுப்பெடுத்துக் கொள்கின்றார்:

a) கார்கில்ஸ் வங்கி தனது ஏகபோக தீர்மானத்தின் பிரகாரம் வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கிக்கு விடுக்கும் அல்லது தொலைநகல் பரிவர்த்தனை மூலமாக வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது என்பதற்கான நியாயபூர்வமான நம்பிக்கையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ள போது எந்தவொரு கோரிக்கையை அல்லது அறிவுறுத்தலை ஏற்று அதற்கமைவாக செயற்படுகின்றது. தொலைநகல் பரிவர்த்தனை மூலமாக வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கிக்கு விடுக்கும் அத்தகைய கோரிக்கைகள் மற்றும்/அல்லது

அறிவுறுத்தல்கள் இதன் பின்னர் "அறிவுறுத்தல்" என அழைக்கப்படுகின்றது.

b) மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் தொடர்பில் வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரிலோ அல்லது கார்கில்ஸ் வங்கியின் எந்தவொரு அறிவிப்பின் பேரிலோ மாற்றம் ஏதேனும் இடம்பெறும் பட்சத்தில், இந்த முன் காப்பீடு தொடர்ந்தும் செல்லுபடியாகும் என்பதையும், வாடிக்கையாளர் இதற்கு கட்டுப்பட்டவர் என்பதையும், அறிவுறுத்தல்கள் தொடர்பான எவ்விதமான மாற்றங்களும் இந்த முன்காப்பீட்டின் நோக்கம் மற்றும் எல்லைக்கு உட்பட்டது என்பதையும் வாடிக்கையாளர் உறுதிப்படுத்தி, ஏற்று மற்றும் பொறுப்பேற்றுக் கொள்கின்றார். எனினும், எவ்விதமான அறிவிப்புமின்றி மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை புறக்கணிக்கும் அல்லது அதற்கமைவாக செயற்படாது விடும் உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளது.

III. தொலைநகல் மூலமாக அனுப்பி வைக்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை ஏற்று செயற்படும் உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளது. அத்தகைய அறிவுறுத்தல்கள் தெளிவானவையோ அல்லது தெளிவற்றவையோ என்பதற்கு அப்பால் கார்கில்ஸ் வங்கியின் தீர்மானம் உறுதியானதும் வாடிக்கையாளர் அதற்கு கட்டுப்பட வேண்டியவராகவும் அமைகின்றது. எந்தவொரு அல்லது அனைத்து அறிவுறுத்தல்களையும் ஏற்று செயல்படும் அல்லது செயல்படாது விடும் பூரண உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளதை இந்த சரத்து எவ்விதத்திலும் விலக்களிக்காது.

IV. தொலைநகல் ஊடாக தகவலை பரிமாற்றம் செய்தல் தகவலை அனுப்புவதற்கான ஒரு பாதுகாப்பான வழிமுறை அல்ல என்பதுடன், சேதப்படுத்தல் மற்றும் அனுமதியற்ற அடைவு, மோசடியாக அல்லது தவறாக எழுத்தப்படல், மாற்றம் செய்யப்படல் அல்லது அனுப்பப்படல் மற்றும் கிடைக்கவேண்டிய தரப்பிற்கு முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ கிடைக்கப்பெறாது விடல் ஆகிய சம்பவங்கள் இடம்பெறலாம். அத்தகைய ஆபத்துக்கள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியுள்ளது:

(a) அறிவுறுத்தல்கள் மோசடியாக எழுதப்பட்டிருத்தல் அல்லது திருத்தம் செய்யப்பட்டிருத்தல்;

(b) அறிவுறுத்தல்கள் உருக்குலைந்த வடிவில் அல்லது தவறாக புரிந்துகொள்ளச் செய்யும் வழியில் அல்லது வடிவில் கார்கில்ஸ் வங்கியை எட்டலாம்;

(c) அறிவுறுத்தல்கள் கார்கில்ஸ் வங்கியை எட்டாது போகலாம் அல்லது கார்கில்ஸ் வங்கியின் வழக்கமான பணி நேரத்தின் போது கிடைக்காமல் போகலாம் அல்லது அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறும் சமயத்தில் தொலைநகல் இயந்திரத்திற்கு அருகில் எவருமே இல்லாது போகலாம் மற்றும்/அல்லது கார்கில்ஸ் வங்கிக்கு பகுதியளவில் மட்டும் கிடைக்கப்பெறலாம்;

(d) செய்தியை புரிந்துகொள்வதில் தவறுகள் இடம்பெறலாம்.

V. அனுப்பி வைக்கப்பட்ட தொலைநகலைத் தொடர்ந்து அதனை இரத்துச் செய்யுமாறு அறிவுறுத்தல் அல்லது எவ்விதமான எழுத்து மூலமான கட்டளை அல்லது அறிவுறுத்தலை வாடிக்கையாளர் விடுக்கும் பட்சத்தில் தொலைநகல் மூலமாக ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலை கார்கில்ஸ் வங்கி பின்பற்றுவதுடன் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கு கடப்பாடு கொண்டுள்ளதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். அத்தகைய அறிவுறுத்தல்களில் முதலாவதாக கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தலை (தொடர்ந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல் அல்லது எழுத்து மூலமான கட்டளை அல்லது அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்று செயற்படுவதற்கு அப்பால்) அல்லது அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்ளும் இந்த வசதியை இடைநிறுத்துவது அல்லது கைவிடுவது என்று தீர்மானித்தாலும் கூட ஆரம்ப அறிவுறுத்தலை வங்கி பின்பற்றலாம்;

VI. வாடிக்கையாளர் தொலைநகல் மூலமாக கார்கில்ஸ் வங்கிக்கு அனுப்பி வைக்கின்ற தொலைநகல் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் செயற்படுவதால் கார்கில்ஸ் வங்கிக்கு ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்புக்கள், நட்டங்கள், சேதங்கள், சட்டச் செலவினங்கள் உட்பட அனைத்து செலவுகளுக்கும் எதிராக கார்கில்ஸ் வங்கிக்கு எவ்விதமான பாதிப்புமின்றி செயற்படுவதாகவும் முன் காப்பீடு வழங்குவதாகவும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்;

**VII.** எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் தொலைநகல் மூலமாக அனுப்பி வைக்கப்படுகின்ற எந்தவொரு அறிவுறுத்தல்களையும் முன்னெடுப்பதற்கு/நீக்குவதற்கு கார்கில்ஸ் வங்கியை பொறுப்பேற்குமாறு வாடிக்கையாளர் கூற முடியாது.

## 42. வங்கியின் உரிமை

வழங்கப்படும் இணைய வங்கிச் சேவை மற்றும்/அல்லது வாடிக்கையாளரின் பயன்பாடு காரணமாக எழுகின்ற அனைத்து நிலுவைத் தொகைகளும் வாடிக்கையாளரது பிரதான கணக்கு மற்றும்/அல்லது துணைக் கணக்கு(கணக்குகள்) அல்லது ஏனைய கணக்கு, தனிப் பெயர் அல்லது கூட்டுப் பெயர்(பெயர்கள்) தொடர்பில் தற்போது உள்ள மற்றும் எதிர்கால வைப்புக்களில் தனது உரிமையை ஈடு செய்யும் அல்லது அறவிடும் உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளது.

**43. அசாதாரண சூழ்நிலை**

கார்கில்ஸ் வங்கி தனது கடமைகளை செய்வதற்கு அசாதாரண சூழ்நிலை காரணமாக தாமதம் அல்லது தடங்கல் ஏற்படக்கூடும் (தொடர்பாடல் கட்டமைப்பு கிடைக்கப்பெறாமை, நாச வேலை, தீ, வெள்ளப்பெருக்கு, குண்டுவெடிப்பு, இயற்கை அழிவு, சிவில் கலகம், வேலைநிறுத்தங்கள் அல்லது தொழிற்சங்க நடவடிக்கை, இனக்கலவரங்கள், கிளர்ச்சி, போர் அல்லது அரசாங்க நடவடிக்கைகள், சட்டமுறை மாற்றங்கள் மற்றும் ஏனைய ஒழுக்காற்று முறைமை தொடர்பான செயற்பாடுகள் அடங்கலாக கார்கில்ஸ் வங்கியின் நியாதிக்கமான கட்டுப்பாட்டை மீறிய நிகழ்வுகள்). இத்தகைய நிலைமைகளின் கார்கில்ஸ் வங்கி தனது கடமையை நிறைவேற்றத் தவறியுள்ளதாக கருதப்பட முடியாது என்பதுடன், குறிப்பிட்ட நியாயமான காலத்திற்குள் அத்தகைய கடமையை வங்கி நிறைவேற்றும் பட்சத்தில் நிலுவையாக உள்ள தொகை மற்றும் அட்டுறு வட்டி ஆகியவற்றை வாடிக்கையாளர் செலுத்த வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்ட காரணங்களால் கார்கில்ஸ் வங்கி தனது கடமையை நிறைவேற்ற முடியாமல் போவதற்காக எவரும் கார்கில்ஸ் வங்கியிடம் எவ்விதமான இழப்பீட்டையும் கோர முடியாது.

**44. பொதுவானவை**

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளர் வேறு எவருக்கும் கைமாற்றம் செய்ய முடியாது. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக கார்கில்ஸ் வங்கி துணை ஒப்பந்தம் அல்லது முகவர்களை பணியில் அமர்த்தக்கூடும். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் எந்த கடமைகளையும் உரிமைகளையும் கார்கில்ஸ் வங்கியானது கார்கில்ஸ் வங்கி குழும நிறுவனங்களுக்கு கைமாற்றம் செய்ய முடியும் அல்லது ஒப்படைக்க முடியும்.

கார்கில்ஸ் வங்கியின் ஒட்டுமொத்த உடன்படிக்கையில் அடங்கியுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (வேறு விதமாக வெளிப்படுத்தப்படுத்தப்பட்டு குறிப்பிடப்பட்டாலன்றி) வர்த்தக இணைய வங்கிச் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர் மற்றும் கார்கில்ஸ் வங்கிக்கு இடையில் முன்னர் ஏற்படுத்தப்பட்ட பிரேரணைகள், பிரதிநிதித்துவங்கள், புரிந்துணர்வுகள் மற்றும் உடன்படிக்கைகளில் வாய் மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ வெளிப்படுத்தப்பட்டுள்ள விளங்கங்களை விட மேலோங்குவதுடன் அவற்றிற்கு பதிலானதாக அமையும். கார்கில்ஸ் வங்கி அல்லது அதன் எந்தவொரு ஊழியர்களின் பிரதிநித்துவத்தில் தான் தங்கியிருக்கவில்லை என்பதையும், வர்த்தக இணைய வங்கிச்சேவை தொடர்பாக சொந்த மதிப்பீட்டை

மேற்கொண்டுள்ளதாகவும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் எவ்விதமான இழப்பீட்டுக் கோரல்களுக்கும் எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கும் உரிமைகள் கிடையாது.

## 45. விதிமுறைகளின் பயன்பாடு

இணைய வங்கிச் சேவையை பயன்படுத்துவது தொடர்பான வாடிக்கையாளருக்கும், கார்கில்ஸ் வங்கிக்கும் இடையிலான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இந்த உடன்படிக்கையின் மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வர்த்தக இணைய வங்கிச் சேவைக்கு விண்ணப்பித்தல் மற்றும் சேவையை பயன்படுத்தல் மூலமாக இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாக வாடிக்கையாளர் உறுதிப்படுத்துகின்றார். வாடிக்கையாளர் கொண்டுள்ள கணக்கு தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு புறம்பாக இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நடைமுறையில் இருக்கும்.

## 46. தனிநபர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு இந்த விதிமுறைகளின் பயன்பாடு

பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் தொகுப்பு ("விதிமுறைகள்" ) வர்த்தக இணைய வங்கிச் சேவையை உபயோகிக்கின்ற தனிநபர்கள் மற்றும் வர்த்தக உரிமையாளர்களுக்கு பொருந்தும். மேற்குறிப்பிட்ட வர்த்தக இணைய வங்கிச்சேவை ("பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்" ) அதிகாரத்திற்கு உட்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இந்த விதிமுறைகள் அமைந்துள்ளன. பிரதான விதிமுறைகளுக்கும், இங்குள்ள விதிமுறைகளுக்கும் இடையில் ஏதாவது முரண்பாடு காணப்படுமாயின் இங்குள்ள விதிமுறைகள் நடைமுறையில் இருக்கும். இங்கு பிரயோகிக்கப்பட்டுள்ள பிரதான சொற்பதங்கள் பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இடம்பெற்றுள்ள அதே அர்த்தங்களைக் கொண்டிருக்கும்.

I. வரைவிலக்கணங்கள்

கொடுக்கல்வாங்கல் அணுகல் வழிமுறை என்பது பொதுவான வங்கிச் சேவை, சொந்த கணக்கில் நிதிப் பரிமாற்றம் (கார்கில்ஸ் வங்கியினுள்), மூன்றாம் தரப்பிற்கு தனி/பன்முக நிதிப் பரிமாற்றங்கள் (கார்கில்ஸ் வங்கியினுள்), மூன்றாம் தரப்பிற்கு தனி/பன்முக நிதிப் பரிமாற்றங்கள் ( கார்கில்ஸ் வங்கிக்கு வெளியில்) SLIPS/CEFT மூலமாக மேற்கொள்வதைக் குறிக்கும்.

II. கொடுக்கல்வாங்கல் அணுகல் வழிமுறை விதிகள்: வாடிக்கையாளருக்கு இயல்பான கொடுக்கல்வாங்கல் அணுகல் வழிமுறை வழங்கப்படும். தனிநபர்கள் அல்லது உரிமையாளர்களாக உள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கொடுக்கல்வாங்கல் அணுகல் வழிமுறை ஒரே மாதிரியாக அமையும்.

வர்த்தக இணைய வங்கிச்சேவை விண்ணப்பப் படிவத்தில் வாடிக்கையாளரால் வழங்கப்பட்டுள்ள தொகைக்கு ஏற்ப வர்த்தக இணைய வங்கிச் சேவையை உபயோகித்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை வாடிக்கையாளர் முன்னெடுக்க முடியும். அதை விட கூடுதலான ஒரு தொகையில் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையொன்றை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் கார்கில்ஸ் வங்கிக் கிளையினூடாக அதனை மாற்றிக் கொள்வதற்கான கோரிக்கையை வாடிக்கையாளர் முன்வைக்க முடியும்.

கொடுக்கல்வாங்கல் அணுகல் வழிமுறையை உபயோகிப்பதற்காக தங்களுடைய மொபைல் இலக்கங்களை பதிவு செய்யுமாறு வாடிக்கையாளர் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், அவ்வாறு வழங்கத் தவறினால் நிதிப் பரிமாற்ற வசதி கிடைக்கப்பெறாது.

## 47. அங்கீகரிக்கப்பட்ட கையொப்பத்தை நீக்குவதற்கு இந்த விதிமுறைகளின் பயன்பாடு

வங்கியில் தமது அங்கீகரிக்கப்பட்ட கையொப்பத்தை நீக்குவதற்கு விண்ணப்பிக்கின்ற வர்த்தக இணைய வங்கிச்சேவை வாடிக்கையாளர்களுக்கு பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் தொகுதி (“விதிமுறைகள்” ) விதிக்கப்படும்.

I. தமது நடைமுறைக்கணக்கிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட கையொப்பத்தை/கையொப்பங்களை நீக்குமாறு வாடிக்கையாளர் வங்கியிடம் கோரிக்கை விடுத்தால், இது தொடர்பில் கடிதம் மூலமான விசேட அறிவித்தல் ஏதும் விடுக்கப்பட்டாலன்றி, வர்த்தக இணைய வங்கிச்சேவையிலிருந்து இக்கையொப்பத்தை (கையொப்பங்களை) நீக்குவதை வங்கி கருத்தில் கொள்ளும்.

II. வர்த்தக வங்கிச் சேவையிலிருந்து கையொப்பத்தை நீக்கும் நடவடிக்கையை வங்கி மேற்கொண்ட பின்னர் வர்த்தக இணைய வங்கிச்சேவையில் வாடிக்கையாளர் ஏற்படுத்தியுள்ள பணிப்பாய்ச்சலை இது பாதிக்கக்கூடும்.

இச்சந்தர்ப்பத்தில், கையொப்பத்தை நீக்கியமை காரணமாக பணிப்பாய்ச்சலில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கு வங்கி பொறுப்பேற்றுக் கொள்ளாது.